# பொதுசன சேவையில் பால்நிலையைப் பிரதானப்படுத்தல்

- ஒரு துரித வழிகாட்டி

பொதுநலவாய செயலகம்

WDP

# பொதுசன சேவையில்
# பால்நிலையைப் பிரதானப்படுத்தல
# ஒரு துரித வழிகாட்டி

பொதுநலயாய செயலகத்தின்

A Quick Guide to .......

Gender Mainstreaming in the Public Service

தமிழ் மொழிபெயர்ப்பு

மொழிபெயர்ப்பாளர்

**திரு. சிவஞானம் ஜெயசங்கர்**

**ISBN : 955-8027-04-9**
முதற் பதிப்பு 2004 - எப்ரல்

பிரசுரம்

சக்தி பால்நிலை சமஉரிமைக்கான செய்திட்டம்.
கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவரகம்
12, அமரசேகர மாவத்தை,
கொழும்பு 05.

தொலை பேசி : (94 11) 2502640 / 1 / 4
பெக்ஸ் : (94 11) 2502643
மின் அஞ்சல் : shakti@slt.lk

அச்சிட்டோர்
சூரிய பிரசுரர்

# உள்ளடக்கம்

அறிக்கை vi
முன்னுரை. vii

1. அறிமுகம் 1

– பால்நிலையும் பொதுசன சேவையும் 1
– பால்நிலையைப் பிரதானப்படுத்தல். 1
– இவ் வழிகாட்டியின் வாய்ப்புக்களும் நோக்கமும் 2

2. பின்னணி 5

– பால்நிலை சமத்துவத்துக்கும் சமஉரிமைக்குமான நிர்ணயங்கள். 5
– பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான கொள்கை ரீதியான அணுகுமுறைகளின் விருத்தி 6

3. பொதுசன சேவையின் ஆளணி முகாமைத்துவத்தில் பால்நிலையைப் பிரதானப்படுத்துவதற்கான நிறுவனத் திட்டவரம்பு 9

– பால்நிலை முகாமைத்துவ முறையியல் 9
– சாத்தியமாக்கும் சூழ்நிலை 9
– பால்நிலை முகாமைத்துவ முறையியலின் கட்டமைப்புக்கள் 9
– பால்நிலை முகாமைத்துவ முறையியல் பொறிமுறை 13

4. பொதுசன சேவையின் ஆளணி முகாமைத்துவத்தில் பால்நிலையைப் பிரதானப்படுத்துவதற்கான படிமுறைகள் 17

– பால்நிலைப் பகுப்பாய்வு 17
– கொள்கை அபிவிருத்தி 22
– ஆளணி முகாமைத்துவத்தில் பால்நிலை தொடர்பான கொள்கை விடயங்கள் 23
– கொள்கை மதிப்பீடு 28
– பால்நிலை செயற்பாட்டுத் திட்டம் 28
– கண்காணிப்பும் மீளாய்வும் 29
– உள்ளக மற்றும் வெளிப்புறத் தொடர்பாடல்கள் 29

உசாத்துணைகள் 31

பின்னிணைப்பு–சொல் அகராதி 33

அட்டவணைகள்
அட்டவணை 1 தெரிவு செய்யப்பட்ட 8 பொதுநலவாய நாடுகளின் பால்நிலை வலுப்படுத்தல் அளவீடு 3

# Message

The Canadian International Development Agency (CIDA) has been operating in Sri Lanka for over forty years. In keeping with CIDA's gender equality policy it has supported projects committed to bring about gender equality in Sri Lanka for nearly fifteen years. One of the main difficulties in promoting gender equality in development and administrative circles has been the lack of appropriate and authoritative literature in the vernaculars.

The Tamil translation of 'A Quick Guide to Gender Mainstreaming in the Public Service' one of the Gender Mainstreaming Reference Manuals of the Commonwealth Secretariat would therefore make a significant contribution to strengthen gender mainstreaming in the public sector in Sri Lanka.

I wish to take this opportunity to thank the Commonwealth Secretariat for permitting CIDA to publish the Tamil translation of 'A Quick Guide to Gender Mainstreaming in the Public Service' as an initiative of the Shakti Gender Equity Program of CIDA in Sri Lanka. I would also like to extend my appreciation to Mr. Sivagnanam Jeyasankar, the translator of this Guidebook for readily agreeing to take on this task at very short notice and for putting out an excellent piece of work.

I am confident that this publication will be very useful to public officers as a guidebook in mainstreaming gender in both administrative and development work.

**Joseph Sebhatu**
Director
Canadian International Development Agency
Program Support Unit
Colombo, Sri Lanka

15 March 2004

## முன்னுரை.

அரச கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள் உட்பட அனைத்து பிரதான ஓட்டங்களிலும் , பால்நிலை நோக்கைக் கொண்டு வருவதற்கு ஒரு பால்நிலை முகாமைத்துவ முறையியலுக்கான (Gender Management System-GMS) கருத்தியலை, அதாவது கட்டமைப்பு, நுட்பம், நடைமுறை ஆகியவற்றை ஒன்றிணைத்த பரந்த வலையமைப்பு ஒன்றை விருத்தி செய்யுமாறு 1996 ஆம் ஆண்டில் பெண்கள் விடயங்களுக்குப் பொறுப்பான பொதுநலவாய அமைச்சர்களால் பொதுநலவாய செயலகம் ஆணையிடப்பட்டது. 1995 ஆம் ஆண்டின் பொதுநலவாயத்தின் பால்நிலையும் அபிவிருத்திக்குமான செயற்பாட்டுத் திட்டத்தில், அடையாளம் காணப்பட்ட அரசுகளுக்கான 15 செயற்பாடுகளில் முதன்மையானதாக, பெண்களுக்கான நிறுவன செயற்கட்டமைப்புக்களையும், பெண்களுக்கான தேசிய நிறுவனங்களையும் அமைப்பதும் பலப்படுத்துவதும் அமைகிறது.

தேசிய அரசுகளின் பொதுச்சேவை அமைச்சு, பால்நிலை முகாமைத்துவமுறையியலை(GMS) பயன்படுத்தி, எவ்வாறு பால்நிலையை பிரதானப்படுத்தலாம் என்பதை வாசகர்களுக்கு உதவும் உத்தேசத்துடன் இவ்வழிகாட்டியைத் தயாரித்தது பால்நிலை முகாமைத்துவ முறையியல் (GMS) வெளியீடான *பொதுச்சேவைகளில் பால்நிலையைப் பிரதானப்படுத்தல்; அரசுகளுக்கும் ஏனைய அக்கறைக்குரியோருக்குமான உசாத்துணைக் கையேட்டினை* அடையச் சாத்தியமான முக்கிய குறிப்புக்களை இந்தக் கையேடு சுருக்கமாக வழங்குகிறது. பொதுச்சேவை ஆணையாளர்கள், ஆளணி முகாமையாளர்கள், திட்டவாளர்கள், கள அலுவலகர்கள் மற்றும் ஏனையோரால் இவ்விரு ஆவணங்களும் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வெளியீடுகளாவன, பால்நிலையை பிரதானப்படுத்தலுக்கான கருவிகளையும் துறைசார் தனித்துவமுள்ள வழிகாட்டிகளையும் வழங்கும் பால்நிலை முகாமைத்துவ முறையியல் தொடரின் பகுதிகளாகும். இந்த வழிகாட்டியானது பால்நிலை முகாமைத்துவ முறையியல் தொடரின் ஏனைய ஆவணங்களுடன், முக்கியமாக பால்நிலை முகாமைத்துவ முறையியலுக்கான கருத்தியல் மற்றும் முறையியல் திட்டவரம்புகளை அளிக்கும் *பால்நிலை முகாமைத்துவ முறையியல் கைநூல்* போன்றவற்றுடன் சேர்த்து பாவிக்கப்படும் என உத்தேசிக்கப்பட்டது.

பால்நிலை முகாமைத்துவமுறையியல் (GMS) கையேடுகள், மற்றும் துரித வழிகாட்டிகளின் ஆக்கமானது, பொதுநலவாயச் செயலகத்தின் பால்நிலை மற்றும் இளைஞர் விவகாரப் பிரிவு, தனிநபர்கள் மற்றும் குழுக்களின் கூட்டுமுயற்சியே ஆகும். பால்நிலை முகாமைத்துவ முறையியல் (GMS) சிந்தனையுருவாக்கத்துக்குப் பின்னாலிருந்த இவர்களது பங்களிப்பு கௌரவிக்கப்பட வேண்டியது. விசேடமாக நான் பின்வருவோருக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன். பால்நிலை முகாமைத்துவ முறையியலை (GMS) உருவாக்க ஆதரித்து அத்திட்டத்தை முன்னோக்கி நகர்த்த ஊக்கம் தந்த அனைத்து அங்கத்துவ அரசுகள், பிரிட்டனில் மாசி 1997 இல் நடைபெற்ற முதலாவது பால்நிலை முகாமைத்துவ ஒழுங்கமைப்பு(GMS) கூட்டத்திலும், மோல்ற்றாவில் சித்திரை 1998 இல் நடைபெற்ற பால்நிலை முகாமைத்துவ முறையியல் (GMS) பயிற்சிப்பட்டறையிலும் கலந்து கொண்டு மதிப்பிட முடியா கருத்தியல் உள்ளீடுகளையும் பின்னூட்டல்களையும் வழங்கிய பங்குபற்றுனர்கள், மற்றும் செயல் திட்டத்துக்கான செயற்குழுவுக்கும்(SCOPA), அத்துடன் இவ்வழிகாட்டி நூலின் பகுதிகளை எழுதியும் தொகுத்தும் வழங்கிய பலவகைப்பட்ட ஆலோசகர்களான சிம்பாப்வே பொதுச்சேவைகள் ஆணையாளர் சாட்ஷா, பால்நிலை முகாமைத்துவ முறையியல் தொடரின் ஆலோசகப் பதிப்பாளராகிய டேனியல் வூல்வோர்ட், முகாமைத்துவ பயிற்சி சேவைப் பிரிவின் விசேட ஆலோசகர் அலெக்ஸ் மத்தேஸன், மதிப்பிடமுடியா

உள்ளீடுகளை வழங்கிய பொதுநலவாயச் செயலகம், பால்நிலை விடயங்களுக்கான திணைக்கள அலுவலகர்கள் குறிப்பாக பால்நிலை முகாமைத்துவ ஒழுங்கமைப்புக் கருத்தியலை உருவாக்கவும் பல்வேறு பங்குதாரர்களை அதற்காக இணப்பதையும் தொடக்கி வைத்த முன்னாள் இயக்குனர் எலெனி ஸ்டமெரிஸ், பதிப்பிற்கான கணிசமான உள்ளீடுகளை வழங்கிய டொக்ரர் ஜூடித் மே பார்கர், இச்செயல்திட்டத்தைப் பதிப்பிப்பதற்காக வழிநடாத்திய பால்நிலை முகாமைத்துவ ஒழுங்கமைப்புத் தொடரின் செயல்திட்ட இணைப்பாளர் டொக்ரர் ராவ்விடா பாக்ஷ்சூடன் ஆகியோருக்கும் நன்றிகள்.

பால்நிலையைப் பிரதானப்படுத்தும் உங்களது முயற்சிகளில் இந்த வளத் தொடரானது உண்மையான பயனை அளிக்கும் என நம்புகிறோம்.

நான்சி ஸ்பென்ஸ்
இயக்குனர்
பால்நிலை, இளைஞர் விவகாரப் பிரிவு
பொதுநலவாயச் செயலகம்.

# 1 அறிமுகம்

**பால்நிலையும் பொதுசனசேவையும்.**

கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக நடந்த பாரிய முயற்சிகளையும், ஒரு சில முன்னேற்றங்களையும் தவிர அநேகமான நாடுகளில், ஆண்களுடன் ஒப்பிடும் பொழுது வாழ்வின் பல நிலைகளிலும் பெண்கள் தொடர்ந்தும் பின்னடைவாகவே உள்ளனர். ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின்(UNDP) மானுட அபிவிருத்தி அறிக்கையானது உடல்நலம், கல்வி, வருமானம் என்பவற்றுக்கான சுட்டிகளின் அடிப்படையில் மானுட அபிவிருத்தி நிகழ்ந்துள்ளதை பதிவு செய்துள்ளது. மானுட அபிவிருத்திச் சுட்டியானது பால்நிலையுடன் தொடர்புடைய அபிவிருத்திச் சுட்டி, மற்றும் பால்நிலை வலுப்படுத்தல் அளவீடு(GEM) ஆகிய பால்நிலையுடன் தொடர்புடைய இரு சுட்டிகளை 1995 ஆம் ஆண்டிலிருந்து உள்ளடக்கியுள்ளது. பெண்களதும் ஆண்களதும் அரசியல் பங்குபற்றுகை (பாராளுமன்றத்தில் வைத்திருக்கும் ஆசனங்கள்), நிர்வாகிகள் முகாமையாளர்களாக இருக்கும் வீதம், உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப வேலையாட்களாக உள்ள பெண்கள், மற்றும் உழைத்த வருமானத்தில் பெண்களும் ஆண்களும் பெறும் பங்கு என்பவற்றை பிரதானப்படுத்துவதால் பால்நிலை வலுப்படுத்தல் அளவீடு(GEM) ஆனது பொதுசன சேவைகளுக்கு விசேட முக்கியத்துவமுள்ளதாகிறது. இவ்வளவுக்கும் பால்நிலை வலுப்படுத்தல் அளவீட்டில் GEM) பாவிக்கப்பட்ட தொகைகள் பொதுத்துறைகளுக்கு மட்டுமன்றி எல்லாத்துறைகளுக்கும் உரியவை எனினும், பல்வேறு நாடுகளிலும் தீர்மானம் எடுத்தலில் உள்ள பால்நிலைத் தடங்கல்களை இவை படம்பிடித்துக் காட்டுகின்றன, பொதுசன சேவையுள்ளேயே பெண்களது தேட்டம் எவ்வாறு ஆண்களுடன் சார்பாக உள்ளது என்ற விளக்கத்தை அளிக்கின்றன. பால்நிலை வலுப்படுத்தல் அளவீட்டில் பயன்படுத்தப்படுகின்ற புள்ளி விபரங்கள் பொதுசனத்துறைக்கு மட்டுமல்லாது அனைத்துத் துறைகளுக்கும் தொடர்புடையதாக இருக்கின்றன. அவை பல்வேறு நாடுகளில் தீர்மானம் எடுத்தலில் பால்நிலை ரீதியான பகுப்பை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றன. இவை, எவ்வாறு பெண்கள் ஆண்களோடு ஒப்பிடுகையில் பொதுசனத்துறைக்குள் வெற்றி பெறுகிறார்கள் என்ற ஒரு விளக்கத்தை அளிக்கிறது.

அட்டவணை 1 தெரிவுசெய்யப்பட்ட பொதுநலவாய நாடுகளுக்குரிய பால்நிலை வலுப்படுத்தல் அளவீடுகளைக் காட்டுகிறது. சில நாடுகளில் உத்தியோக, தொழில்நுட்ப வேலைகளில் பெண்கள் நன்றாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, எண்ணிக்கை கிடைக்கக்கூடியதாகவிருந்த எல்லா பொதுநலவாய நாடுகளிலும், பாராளுமன்றத்திலும் நிர்வாகிகளாகவும், முகாமையாளர்களாகவும் ஆண்களை விட மிகக்குறைவான பெண்களே வேலை செய்வதை இது வெளிப்படுத்துகிறது. உழைப்பு ஊதியத்தின் பங்கீட்டைக் கருதின் அநேகமான பிரதேசங்கள் குறிப்பிடத்தக்க அளவு ஆண்களுக்கு சார்பான சலுகை உள்ளதாகவே காணப்படுகிறது.

**பால்நிலையைப் பிரதானப்படுத்தல்.**

பொதுநலவாயத்தின் 1995 ஆம் ஆண்டிற்கான பால்நிலைக்கும் அபிவிருத்திக்குமான செயல்திட்டம் அளிக்கும், நோக்கானது,

*“மனிதரது முயற்சிக்குட்பட்ட எல்லாத்துறைகளிலும், அவர்களது ஆக்கத்திறனை வெளிப்படுத்தக்கூடியதாக, வாழ்வின் எல்லாத்தளங்களிலும் சமனான உரிமைகளும் வாய்ப்புக்களும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் உடையதான ஒரு உலகம் – அதில் பெண்கள் மதிக்கப்படுவதுடன், சமூகநீதி, சமத்துவம், ஜனநாயகம், மனித உரிமைகளுக்கான மதிப்பு போன்ற விழுமியங்களைக் கட்டியெழுப்புவதில் சமனான இயலுமான பங்காளிகளாக மதிப்பிடப்படுவர்.*

*எல்லா நாடுகளிலும் இத்தகைய விழுமியங்களைக் கொண்ட திட்டவரம்பினுள் மக்கள் மையப்பட்ட, நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை உறுதி செய்வதற்காக பெண்களும் ஆண்களும் கூட்டாக, பங்குதாரர்களாக வேலை செய்வர்."*

## *பொதுநலவாய செயலகம், 1995*

பால்நிலை சமத்துவத்தையும், சம உரிமையையும் மேம்படுத்துவதற்கான செயல்திட்டத்தின் மையமான உத்தியாக பால்நிலையைப் பிரதானப்படுத்தல் உள்ளது. இது அபிவிருத்தியின் எல்லா மட்டங்களிலும், அதாவது கொள்கை அமுலாக்கம், திட்டமிடல், நிகழ்ச்சித்திட்டங்கள், செயல்திட்டங்கள் போன்றவற்றிலும் பால்நிலை நோக்கு உறுதியாகப் பாவிக்கப்படவேண்டும் எனக்கூறுகிறது. பொதுசனசேவைகயைக் கருதின் பொதுசனசேவை ஆணையகம், அரசின் மத்திய ஆளணி அலுவலகம் அதே போன்று மைய மற்றும் துறைசார் அமைச்சுக்களின் ஆளணித் திணைக்களங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளை இது உள்ளடக்கும்.

## இவ் வழிகாட்டியின் வாய்ப்புக்களும் நோக்கமும்

இந்த வெளியீட்டின் நோக்கமானது, தேசிய அரசுகளின் பொதுசன சேவையில் பால்நிலையைப் பிரதானப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவதாகும்.

தேசிய அரசாங்கங்களிலும், மற்றும் விரிவாக பொதுச்சமுகத்திலும், பால்நிலையைப் பிரதானப்படுத்துவதற்கான தாக்கமான வழிமுறையாக விருத்தி செய்யப்பட்ட பால்நிலை முகாமைத்துவ முறையியலின் முக்கிய ஆதாரமான கூறுகளை இந்த வழிகாட்டி வழங்குகிறது. பால்நிலை சமத்துவத்துவத்தையும், சமஉரிமையையும் மேம்படுத்துவதற்கான உலக மற்றும் பொதுநலவாயத்தின் நிர்ணயங்கள் பற்றிய ஒரு பொதுவான பார்வையை வழங்குவதுடன், இந்த விடயம் சம்பந்தமான கோட்பாட்டு ரீதியான அணுகுமுறைகளின் வளர்ச்சியையும் பரீட்சிக்கிறது.

இவ்வழிகாட்டியானது, பொதுசன சேவை மறுசீரமைப்புக்கான பின்னணியில், பொதுசன சேவையின் ஆளணி முகாமைத்துவக் கட்டமைப்பு, தொழிற்பாடு ஆகியவற்றை ஆராய்கிறது. அத்துடன் ஆளணி முகாமைத்துவத்தில் பால்நிலை தொடர்பான கொள்கை விடயங்களையும் இது ஆராய்கிறது. மேலும் இது பால்நிலைப் பகுப்பாய்வுக்கான வழிமுறைகளை வழங்குவதுடன், குறித்த நாடுகளின் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவகையில் பொதுசன சேவையில் பால்நிலை சமத்துவத்தையும், சம உரிமையையும் மேம்படுத்தக்கூடியதாக அரசாங்கங்களால் கருத்துக்கு எடுத்து ஏற்றுக் கொள்ளக்கூடிய கொள்கைரீதியான தலையீடுகள் சிலவற்றையும் பரிந்துரைக்கிறது. இது முதன்மையாக பால்நிலையைத் தமது எல்லாக் கொள்கைகள், திட்டங்கள், நிகழ்ச்சிகளில் அமுல்படுத்தும் பொதநலவாய அரசாங்கங்களால் பாவிக்கப்படும் என உத்தேசிக்கப்படுகிறது. அத்துடன் ஏனைய அரசாங்கங்கள், தொடர்புடைய முகவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இது பயன்படலாம்.

## அட்டவணை 1

### தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் பால்நிலை வலுப்படுத்தல் அளவீடு (GEM)

| நாடு | பால்நிலை வலுப்படுத்தல் நிலை GEM | பாராளுமன்றத்தில் வைத்திருக்கும் ஆசனங்கள் பெண்களுக்கான % | நிர்வாகிகள் முகாமையாளர்கள் (பெண்கள் %) | உத்தியோகத்தர் தொழில்நுட்ப வேலையாட்கள் (பெண்கள் %) | ஏழைப்பு வருமானப்பங்கு பெண்களுக்கான %) |
|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 11 | 20.5 | 43.3 | 25.0 | 39.8 |
| பஹ்ரீமாஸ் | 19 | 10.8 | 26.3 | 56.9 | 39.5 |
| பங்களாதேஷ் | 76 | 9.1 | 5.1 | 23.1 | 23.1 |
| பார்படோஸ் | 14 | 18.4 | 37.0 | 52.1 | 39.5 |
| பெ(B)லீஸ் | 32 | 10.8 | 36.6 | 38.8 | 18.0* |
| பொட்ஸ்வானா | 39 | 8.5 | 36.1 | 61.4 | 38.9 |
| கமரூன் | 65 | 12.2 | 10.1 | 24.4 | 30.9 |
| கனடா | 6 | 19.3 | 42.2 | 56.1 | 37.8 |
| சைப்பிரஸ் | 60 | 5.4 | 10.2 | 40.8 | 27.1 |
| பி(F)ஜி ஐலன்ட் | 68 | 5.8 | 9.6 | 44.7 | 21.4 |
| குயானா | 33 | 20.0 | 12.8 | 47.5 | 26.4 |
| இந்தியா | 86 | 7.3 | 2.3 | 20.5 | 25.7 |
| லெசொத்தோ | 41 | 11.2 | 33.4 | 56.6 | 30.3 |
| மாலைதீவு | 67 | 6.3 | 14.0 | 34.6 | 35.4 |
| மோல்டா | – | – | – | – | 20.9 |
| மாலாவி | 80 | 5.6 | 4.8 | 34.7 | 42.0 |
| மலேசியா | 48 | 10.3 | 11.9 | 44.5 | 30.2 |
| மொரிசியஸ் | 49 | 7.6 | 14.3 | 41.4 | 25.4 |
| மொஸாம்பிக் | 43 | 25.2 | 11.3 | 20.4 | 41.3 |
| நியுசிலாந்து | 5 | 29.2 | 32.3 | 47.8 | 38.8 |
| பாகிஸ்தான் | 92 | 3.4 | 3.4 | 20.1 | 20.8 |
| பப்புவாநியுகினியா | 85 | – | 11.6 | 29.5 | 34.8 |
| சியாராலியோன் | 77 | 6.3 | 8.0 | 32.0 | 29.7 |
| சிங்கப்பூர் | 47 | 2.5 | 34.3 | 16.1 | 30.7 |
| சொலமன் ஐலண்டஸ் | 91 | 2.1 | 2.6 | 27.4 | 40.0* |
| தென்ஆபிரிகா | 22 | 23.7 | 17.4 | 46.7 | 30.8 |
| இலங்கை | 70 | 5.3 | 16.9 | 24.5 | 34.5 |
| சுவாஸிலாந்து | 61 | 8.4 | 14.5 | 54.3 | 34.9 |
| ட்ரினிடாட்,டோபாகோ | 17 | 19.4 | 23.3 | 53.3 | 29.7 |
| ஐக்கிய ராச்சியம் | 20 | 7.8 | 33.0 | 43.7 | 35.0 |
| ஸாம்பியா | 71 | 9.7 | 6.1 | 31.9 | 38.8 |
| ஜிம்பாப்வே | 45 | 14.7 | 15.4 | 40.0 | 37.4 |

## 2. பின்னணி

**பால்நிலை சமத்துவத்துக்கும் சமஉரிமைக்குமான நிர்ணயங்கள்.**

பொதுநலவாயத்தாலும், ஐநா மற்றும் அதனுடன் தொடர்புடைய முகவர்களாலும், சில பிராந்தியக்குழுக்கள் ஆகியவற்றாலும் பால்நிலை சமத்துவத்தையும், சமஉரிமையையும் மேம்படுத்தல் சர்வதேச ரீதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**பொதுநலவாயம்.**

பொதுநலவாயமானது பால்நிலை சமத்துவத்துவத்தையும், சமஉரிமையையும் ஏற்படுத்த அர்ப்பணிப்பாயுள்ளது. எல்லா அரச கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்றிட்டங்கள் என்பவற்றுள்ளும் பால்நிலை எண்ணத்தைப் பிரதானப்படுத்தல் என்பது, பால்நிலைக்கும் அபிவிருத்திக்குமான 1995 ஆம் ஆண்டின் பொதுநலவாய செயற்திட்டத்தின் மைய உத்தியாக உள்ளது. செயற்திட்டமானது, அங்கத்துவ அரசாங்கங்கள் ஒரு தேசிய பால்நிலை செயற்திட்டத்தை தேர்ந்தெடுக்கவும், பால்நிலையைப் பிரதானப்படுத்தும் படிமுறையை முன்னெடுக்கக் கூடிய,- போதுமான வளங்களையும், அரசின் உயர்மட்டத்திலிருந்து உருவாகும் அதிகாரத்தை உடைய பலமான தேசிய பெண்களுக்கான நிறுவன செயல் கட்டமைப்பு ஒன்றின் முக்கியத்துவத்தை வற்புறுத்தியும் பரிந்துரைக்கிறது.

செயற்திட்டத்தின் கீழ்வரும் அரசுகளுக்கான 15 செயற்குறிப்புக்களுள் ஏழு செயற்குறிப்புக்களாவன பொதுசன சேவை ஆணைக்குழுக்கள், மத்திய ஆளணி அலுவலகங்கள், மற்றும் இதேபோன்ற அரச முகவர்களுக்கு விசேடமாக உகந்தவையாக உள்ளன.

1. பால்நிலை முகாமைத்துவ முறையியல்களையும், தேசிய பெண்களுக்கான நிறுவன செயல் கட்டமைப்புக்களையும் நிறுவிப் பலப்படுத்தல்;
2. அனைத்து தேசிய கொள்கைகள், திட்டங்கள், நிகழ்ச்சிகளிலும் பால்நிலை விடயங்களை ஒன்றிணைத்தல்;
3. பால்நிலைத் திட்டமிடலில் ஆற்றலைக் கட்டியெழுப்புதல்;
4. பால்நிலை விழிப்புணர்வுடைய தொழில்தருணர் என்ற வகையில் சிறந்த வழக்கத்தையுடைய முன்னுதாரணம் ஆகுதல்;
5. சமமான வாய்ப்புக்களையும் உண்மையான மற்றும், அல்லது உறுதியான செயல்களைளயும் நாடு முழுவதிலும் ஊக்குவித்தலும், முன்னுரிமைகளின் போது பெண்களையும் ஆண்களையும் சமமாக கலந்தாலோசித்தலும்;
6. பாரபட்சத்துக்கு எதிரான நடவடிக்கை எடுத்தல்;
7. தீர்மானம் எடுத்தலில் பெண்களின் பங்குபற்றலுக்காக நடவடிக்கை எடுத்தல்;

இச் செயற்குறிப்புக்களை முன்னெடுத்து நேரடியாகவும் (அரசாங்கத்துள்), மறைமுகமாகவும் (பரவலான சமூகத்திலும்) பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்த குறிப்பிடத்தக்க பங்களிப்பதற்கான உபாயமாக, அரசுகளின் பணியாட்களை நியமித்தல், மற்றும் பொதுசன சேவையின் ஆளணி முகாமைத்துவம் ஆகியவற்றில் முக்கிய பங்கெடுப்பவர்களாகவும்-நியமனங்கள், பதவியுயர்வுகள், பயிற்சிகளும் ஒழுக்காறுகளும் அகியவற்றை உள்ளடக்கிய பொறுப்புக்களை உடைய பொதுசன சேவை ஆணைக்குழுக்களும் மத்திய ஆளணி அலுவலகர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## உலகளாவிய கடப்பாடுகள்

"கொள்கைகள், பொருளாதாரக் கட்டமைப்புக்கள், எல்லா வகையான உற்பத்திச்செயற்பாடுகள், மற்றும் வளங்களை அடையும் வழிகள் ஆகியவற்றிலுள்ள சமத்துவமின்மைகள்", மற்றும் "எல்லா மட்டங்களிலும் அதிகாரத்தைப் பகிர்வதிலும் தீர்மானம் எடுத்தலிலும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலுள்ள சமத்துவமின்மைகள்" உள்ளடங்கலாக அக்கறைப்பட வேண்டிய 12 மோசமான விடயங்களுக்கு நடவடிக்கை எடுக்கும்படி பீஜிங்கில் 1995இல் நடைபெற்ற நான்காவது உலகப் பெண்கள் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாட்டுக்கான தளமானது, அரசாங்கங்களையும் சர்வதேச சமூகத்தையும், பொதுச்சமூகத்தையும் அழைக்கிறது (ஐநா 1995a). இவ் அக்கறைக்குரிய விடயங்களின் கீழ் பின்வரும் உபாயரீதியான நோக்கங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

★ உத்தியோகரீதியான வேறுபடுத்தல் மற்றும் எல்லா வடிவத்திலுமான தொழில்ரீதியான பாரபட்சங்களையும் நீக்குதல்;

★ அதிகாரக் கட்டமைப்புக்கள், தீர்மானம் எடுத்தல் ஆகியவை பெண்களால் சமமாக அடையக் கூடியதாக இருப்பதையும், அவற்றில் முழுமையாகப் பங்களிப்பதையும் உறுதிப்படுத்துதுவதற்கான நடவடிக்கை எடுத்தல்;

★ தலைமைத்துவத்திலும், தீர்மானம் எடுத்தலிலும் பங்களிப்பதற்கான பெண்களது ஆற்றலை அதிகரித்தல்;

இந்த நோக்கங்களை அடையும் வழியில் கடமையாற்றும் தெளிவான பொறுப்பு அநேகமான நாடுகளில் முக்கியமான பொதுசனத்துறை வேலை கொள்வோர் என்ற வகையில் பொதுசன சேவைக்கு உள்ளது.

அத்துடன், பொதுநலவாயத்தின் அநேகமான நாடுகள் பெண்களுக்கு எதிரான சகலவிதமான பாரபட்சங்களையும் நீக்குவதற்கான சமவாயத்தை(CEDAW) ஏற்றுக் கொண்டுள்ளன. இது "பெண்களது தாழ்வான அந்தஸ்தை அகற்றுவதற்கும், பெண்களது கூடுதலான முன்னேற்றத்துக்கான நிறுவனங்களை அமைப்பதை ஊக்குவிப்பதற்குமான", சட்டங்களை அமுலாக்க அரசாங்கங்களை கடப்பாடுடையவர்களாக்குகிறது. (CEDAW 1995).

## பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான கொள்கை ரீதியான அணுகுமுறைகளின் விருத்தி

பெண்களது மேம்பாட்டுக்கான ஐ.நாவின் தசாப்தமானது (1975-1985) பொருளாதார மற்றும் சமூகரீதியாக பெண்களது நிலைப்பாட்டை முன்னேற்றக் கூடிய செயற்றிட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் உருவாக்க ஐ.நாமுகவர்களையும், தேசிய அரசுகளையும், அரசசார்பற்ற நிறுவனங்களையும் ஊக்குவிக்கிறது. அபிவிருத்தியில் பெண்களது தேவைகள் பற்றிய கொள்கைரீதியான கவன ஈர்ப்புக்கான கோரிக்கையானது, பரந்தளவில் அபிவிருத்தி பற்றிய கொள்கை உருவாக்கும் நிறுவனங்கள் மற்றும் செயற்றிட்ட நிறுவனங்களில், அடையும்வழி அல்லது "ஒருங்கிணைத்தல்" என்ற வரையறைகளுள் அடிக்கடி வரையறுக்கப்பட்டு வருகிறது.

அபிவிருத்தியில் பெண்கள்(WID) அணுகுமுறையானது இந்த எடுகோளையும், மற்றும் அபிவிருத்திக்கு பொருளாதாரப் பங்களிப்பை வழங்கக் கூடிய, இதுவரை பாவிக்கப்படாத வளம் பெண்கள் எனும் அடிப்படையான நியாயப்பாட்டையும் ஆதாரமாகக் கொண்டுள்ளது. அபிவிருத்தியில் பெண்கள் எனும் அணுகுமுறையின் பின்னுள்ள சிந்தனையானது கல்வி முறைமைகளிலும், மற்றும் உயர்பயிற்சியுடைய தொழிலாளர்களிலும் முகாமையாளர்களிலுமான அதீத முதலீடுகளின் விளைவு

விவசாயத்தை ஆதாரமாகக் கொண்ட சமூகங்களை கைத்தொழில்மயப்பட்ட நவீனமயப்பட்ட சமுகங்களாக தன்மை மாற்றுவதாக அமையும் என்ற எடுகோளால் பலமாக செல்வாக்குப்

பெறுகிறது. இந்த மாற்றங்களால் பெண்களும் ஆண்களும் சமமாக ஆதாயமடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1980 இல் இந்த எடுகோள் கேள்விக்குள்ளாக்கப்படத் தொடங்கியது எனினும், நவீனமயமாதலின் கடந்த இரு தசாப்தங்களில் ஒப்பீட்டளவில் பெண்களது நிலைமை மிகச்சிறிய முன்னேற்றத்தை மட்டுமே காட்டுவதுமன்றி உண்மையில் சில துறைகளில் வீழ்ச்சியும் அடைந்துள்ளது. அபிவிருத்தி பற்றிய பெண்களது அனுபவமானது ஆண்களிலிருந்து வேறுபட்டது, என்பது படிப்படியாக பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பெண்களது பார்வைகள் கருத்துக்கள், மற்றும் அனுபவங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஆராய்ச்சிகள் ஆரம்பித்தன.

பெண்களும் அபிவிருத்தியும்(WID) அணுகுமுறைக்கு மாற்றாக பால்நிலையும் அபிவிருத்தியும்(GAD) அணுகுமுறை அளிக்கப்பட்டது. இவ் அணுகுமுறையானது, பெண்களது பிரச்சனைகளை பால்நிலை நோக்கில் அல்லாது (உ+ம்-பெண்களைத் தாழ்த்துகின்ற அடக்குகின்ற பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையிலான சமூக உறவு) பால் அடிப்படையில் (உ+ம்-ஆண்களிலிருந்தான உடலியல் ரீதியான வேறுபாடுகள்) நோக்கும் முன்னைய போக்கைக் கேள்விக்குள்ளாக்குகிறது. மேலும் பால்நிலையும் அபிவிருத்தியும் (GAD) அணுகுமுறையானது வகுப்பு இன வேறுபாடுகளையும் மற்றும் வகுப்பு/இனங்களுக்கு உள்ளான வித்தியாசங்களையும் பால்நிலையுடன் தொடர்புடையவை என்ற வகையில் கருத்துக்கு எடுக்க வேண்டியது முக்கியம் என அழுத்தம் கொடுக்கிறது.

பெண்களுக்கு வாழ்வின் எல்லா நிலைகளிலும் சமமான நிபந்தனைகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும் எனும் அபிவிருத்தியில் பெண்கள்(WID) நோக்கை பால்நிலையும் அபிவிருத்தியும் அணுகுமுறையானது(GAD) ஆதரிக்கிறது எனினும், சமூகத்தில் பால்நிலை அதிகாரக் கட்டமைப்புக்களை சோதிப்பதே இதன் முதலான இலக்காகும்.

பெண்களது விடுதலையை மேம்படுத்தும் இந்தப் படிமுறைக்கு அரசு(State) உதவ வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதுடன், அழைக்கவும்படுகிறது. உதாரணமாக அநேகமான நாடுகளில் பெண்கள் தனிப்பட்ட முறையிலும் தொண்டு அடிப்படையிலும் வழங்கும் குழந்தை பராமரிப்பு போன்றவற்றை சமூக சேவைகள் மூலம் வழங்கி உற்பத்தி வட்டத்தில் பெண்களது பங்குபற்றலுக்கான அனுசரணையைப் பொறுப்பெடுத்தல்.

பால்நிலையும் அபிவிருத்தியும்GAD) என்பதன் பிரதான நோக்கம் அபிவிருத்தித் திட்டமிடலிலும், அமுல்படுத்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பெண்கள் வலுப்பெறுதலை உறுதிப்படுத்தல் ஆகையால், அபிவிருத்தியில் பெண்கள்(WID) என்பதிலிருந்து பால்நிலைக்கும் அபிவிருத்திக்கும்(GAD) அழுத்தம் கொடுக்கும் நகர்வானது அபிவிருத்தி வளங்களை கூடிய வினைத்திறனுடன் பாவிப்பதையும், பாரிய நீண்டகால பயன்களையும், சாத்தியமாக்கும். பால்நிலையும் அபிவிருத்தியும் (GAD) அணுகுமுறையில் பெண்கள் அபிவிருத்தி உதவியில் செயலற்ற பெறுனர்களாக அல்லாது மாற்றத்துக்கான முகவர்களாக நோக்கப்படுகின்றனர். இருப்பினும், கொள்கை நோக்கில் ஏற்பட்டுள்ள இந்த நகர்வை பின்பற்றுவதில் வேகக் குறைவு சிலவேளைகளில், அரச செறல்படுத்தலில் காணப்படுகிறது (பொதுநலவாயச் செயலகம், 1999b).

**பால்நிலையைப் பிரதானப்படுத்தல் சம்பந்தப்படும் ஏனைய விடயங்களுக்குளாவன;**

★ நிலைத்து நிற்கும் அபிவிருத்தியில் பெண்களாலும் அதே போன்று ஆண்களாலும் வகிக்கப்படும் இன்றியமையாத பாத்திரங்களில் கவனிப்பைக் குவித்தல், மற்றும் இந்தப் பாத்திரங்கள் அங்கீகரிக்கப்படுதலை உறுதிப்படுத்தல்;

★ எல்லா மட்டங்களிலும் அதாவது, தேசிய மட்டத்தில் அரசாங்கம் மற்றும் பொதுச்சேவைகளிலும், உள்ளூர் மற்றும் சமூக மட்டத்திலும், குடும்பம் மற்றும் தனிப்பட்ட

மட்டத்திலும் பெண்களதும் ஆண்களதும் குரல்கள் சமமாகக் கேட்கப்படுவதையும், மற்றும் பெண்களும், ஆண்களும் அவர்களது வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயங்கள் பற்றிய தீர்மானங்கள் எடுத்தலில் பங்கெடுத்தலையும் உறுதிப்படுத்தல் ;

★ கொள்கைத் தீர்மானங்கள் பெண்களதும் ஆண்களதும் வாழ்வில் வெவ்வேறு வழிகளிலேயே விளைவுகளை எற்படுத்தும் எனும் விழிப்புணர்வு மற்றும் எல்லாத் துறைகளிலும் பால் - தரம்பிரிக்கப்பட்ட தரவை அடிப்படையாகக் கொண்ட கொள்கையை உருவாக்கல் என்பவற்றை உறுதிப்படுத்தல் ;

★ அரசாங்க சேவைகளின் விநியோகம் சமத்துவமாக இருப்பதையும் மற்றும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் - வயது, நிற/இனம், வகுப்பு/சாதி மற்றும் ஏனைய வேறுபாடுகள் அடிப்படையிலான வேறுபட்ட சமூகக் குழுக்களுக்குமிடையில் ஒதுக்கப்படும் வளங்கள் சமத்துவ அடிப்படையில் இருப்பதையும் உறுதிப்படுத்தல்;

★ தமது தேவைகளையும் அவாக்களையும் வரையறுக்கவும் தீர்க்கமாகத் தெரிவிக்கவும், எல்லா மட்டங்களிலும் சமத்துவமாகப் பங்குபற்றும் வகையில் திறன்கள், அனுபவம், தன்னம்பிக்கையைப் பெறவும், பெண்களை வலுப்படுத்தல் ; மற்றும்

★ கொள்கை அறிக்கைகளிலும் ஏனைய ஆவணங்களிலும் பாவிக்கப்படும் மொழி பால்நிலை உணர்திறனுடையதாகவும், அதனைப் பரந்துள்ளடக்கியதாகவும், சமூகத்தின் ஆண் பார்வையை நோக்கி ஒருதலையாக பொருள்படாததாகவும் இருப்பதை உறுதிப்படுத்தல்;

## 3. பொதுசன சேவையின் ஆளணி முகாமைத்துவத்தில் பால்நிலையைப் பிரதானப்படுத்துவதற்கான நிறுவனத் திட்டவரம்பு

### பால்நிலை முகாமைத்துவ முறையியல்

தேசிய அரசுகள் முழுவதுமாக பால்நிலையைப் பிரதானப்படுத்தும் உபாயமாக பால்நிலை முகாமைத்துவ முறையியலை(GMS) பொதுநலவாயம் உருவாக்கியுள்ளது. பால்நிலை முகாமைத்துவ முறையியல்(GMS) பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது.

*"நிலைத்து நிற்கும் அபிவிருத்தி எனும் சந்தர்ப்பத்துள் விரிவான பால்நிலைச் சமஉரிமையை அடைவதற்காக நிறுவன வேலையின் எல்லாப் பகுதிகளிலும் பால்நிலையைப் பிரதானப்படுத்தலை வழிகாட்டவும், திட்டமிடவும், கண்காணிக்கவும், மதிப்பீடு செய்யவும் ஏற்கனவே இருக்கும் நிறுவன திட்டவரம்பினுள் (தேசிய அரசுகள் போன்ற) நிறுவப்படும் கட்டமைப்பு, நுட்பம், படிமுறை ஆகியவற்றின் வலையமைப்பு..."*

*பொதுநலவாயச் செயலகம், 1999a*

### சாத்தியமாக்கும் சூழ்நிலை

பொதுச்சேவைகளில் பால்நிலையைப் பிரதானப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்துக்கு பால்நிலை சமத்துவத்துக்கு ஏதுவான உயர்மட்டத்திலுள்ள அரசியல் தீர்மானம், சட்ட மற்றும் நிர்வாக திட்டவரம்புகள், மற்றும் நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கலுக்கு போதுமான வளங்கள் உள்ளடங்கலான சாதகமான சாத்தியமாக்கும் சூழ்நிலை தேவைப்படுகிறது. இவற்றில் ஏதோவொரு கூறு குறையுமிடத்தில், பொருத்தமான சாதகமாக்கும் சூழலுக்கான அவசிய பிரக்ஞை மாற்றத்தைக் கொண்டுவர ஆதரவு கோருதல், பரிந்துரைத்தல், விழிப்புணர்வு ஏற்படுத்தல் என்பவற்றின் பொறுப்பு தேசிய பெண்கள் நிறுவன செயற்கட்டமைப்புக்கள், பெண்கள் குழு, அதேபோன்று ஏனைய ஆர்வமுடைய குழுக்கள் ஆகியவற்றின் கட்டாயமாகிறது.

பொதுச்சேவைகள் ஆணைக்குழுக்கள் மற்றும் மத்திய ஆளணி முகவர்கள் தமது மேற்பார்வை செய்யும் பாத்திரத்தினூடாக சகல நிர்வாக முறையியலிலும் – பால்நிலையைப் பிரதானப்படுத்தவதுடன் சம்பந்தப்பட்ட அக்கறைக்குரியோருக்கு இலக்குகளை அடையாளம் காணுதல், கொள்கை ரீதியான அறிவுரைகள் வழங்குதல் என்பவற்றின் மூலம் இந்தப் பிரக்ஞை மாற்றத்தைக் கொண்டுவருவதிலும், பால்நிலைக்குச் சாதகமான கொள்கைகள் உத்தரவாதமாக அமுல்படுத்தப்படுவதிலும் முக்கிய பாத்திரத்தை வகிக்கலாம்.

### பால்நிலை முகாமைத்துவ முறையியலின் (GMS) கட்டமைப்புக்கள்

பால்நிலையைப் பிரதானப்படுத்தலுக்கான பலமான நிலைத்து நிற்கக்கூடிய நிறுவனத் திட்டவரம்பு ஒன்றை வழங்குவதற்காக பால்நிலை முகாமைத்துவ முறையியலின்(GMS) இடைத்தொடர்புள்ள கட்டமைப்புக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பால்நிலை முகாமைத்துவ முறையியலின் (GMS) ஒரு மைய பகுதியாக

பெண்கள் அல்லது பால்நிலை விவகார அமைச்சு, நிதி, அபிவிருத்தித் திட்டமிடல், நீதி, மற்றும் பொதுச்சேவைகள் போன்ற மைய அரச அமைச்சுக்களின் நிரந்தர செயலாளர்களைக் கொண்ட பால்நிலை முகாமைத்துவக் குழு அமைகிறது. பால்நிலை முகாமைத்துவக் குழுவானது பால்நிலைச் சமத்துவத்துக்கான தேசிய ஆணைக்குழுவின் தலைவர் போன்ற பொதுச்சமூகத்தின் ஒரு பிரதிநிதியையாவது ஆகக்குறைந்தது உள்ளடக்கியிருக்க வேண்டும்.

பால்நிலை முகாமைத்துவக் குழுவின் பங்கு மத்திய அமைச்சுக்களில் பால்நிலையைப் பிரதானப்படுத்துவதற்கான தலைமைத்துவத்தை வழங்குதல் மற்றும் பரந்த நடவடிக்கைக்கான கொள்கைகள், இக் கொள்கைகளின் தாக்கத்தை அளவிடுவதற்கான காட்டிகள், இவற்றின் அமுல்படுத்தலுக்கான கால அளவீடுகள் ஆகியவற்றை நிறுவுதல் என்பனவாக அமையும்.

பால்நிலையைப் பிரதானப்படுத்துவதற்கான வேறு நிறுவன ஒழுங்குகளையும் பால்நிலை முகாமைத்துவ முறையியல் (GMS) உள்ளடக்குகிறது.

★ பால்நிலைக்கான பிரதான நபர்கள்– ஒவ்வொரு மத்திய அமைச்சுக்களிலும், உள்ளக பால்நிலை திறனாளர்களாக சேவை வழங்கி, பால்நிலை விடயங்கள் பற்றிய தகவல்களைப் பரிமாறுதல், மற்றும் அவர்களுடைய அமைச்சுக்களில் பால்நிலையைப் பிரதானப்படுத்தலை மேம்படுத்தும் பொறுப்புடைய இரண்டு அல்லது அதற்க மேற்பட்ட மூத்த அலுவலகர்கள் நியமிக்கப்படல்;

★ ஒவ்வொரு அமைச்சினதும் பால்நிலை பிரதான நபர்களைப் பிரதிநிதிகளாகக் கொண்ட அமைச்சுக்களுக்கு இடையிலான வழிகாட்டும் சபை;

★ பால்நிலைச் சமத்துவத்துக்கான ஆணைக்குழு அல்லது சபை; மற்றும்

★ பால்நிலை விழிப்புணர்வுள்ள பாராளுமன்ற பிரதிநிதிகளைக் உள்ளடக்கிய பாராளுமன்ற பால்நிலைச் செயற்குழு;

பால்நிலை முகாமைத்துவ முறையியலின் (GMS) பல்வேறு நிறுவனக் கட்டமைப்புக்களைக் கட்டமைப்பதில் முக்கிய பங்கை பொதுச்சேவை ஆணைக்குழுக்கள் மற்றும் மத்திய ஆளணி முகவர்கள் கொண்டிருக்கின்றன. அவரவர்க்குரிய திணைக்களங்களினூடாக பால்நிலைக்கான பிரதான நபர்கள் பிரேரிக்கப்படும் அதேவேளை, நிறுவனக் கட்டமைப்புக்களை விருத்தி செய்வதற்கும் வெவ்வேறு பதவிகளுக்கான பிரேரிப்புக்கள் வருவதை உறுதி செய்தவதற்கும், பொதுச்சேவைகள் ஆணைக்குழுக்கள் மற்றும்/அல்லது மத்திய ஆளணி முகவர்கள் சட்டரீதியான முகவர்களுடன் செயற்படலாம். உ–ம் தேசிய பெண்களுக்கான நிறுவன செயற்கட்டமைப்புக்கள் (பெண்கள் விவகார அமைச்சின் பெண்கள் குழு).

பால்நிலை முகாமைத்துவ முறையியல் (GMS) கட்டமைப்பானது அது நிறுவப்பட்ட குறிப்பிட்ட நிறுவனம் அல்லது முகவரது அமைப்புக்குள்ளேயே செயற்படும். பொதுச்சேவை முகாமைத்துவ முறையியல் எனும் போது, இந்த அமைப்பானது பிரத்தியேகமான தேச சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மாறுபடுவதுடன், மாற்றத்துக்கு உட்பட்டுக்கொண்டும் இருக்கும்.

பால்நிலை செயற்பாட்டுத் திட்டத்தினாலும் மற்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அவரவரது செயற்பாடுகளுள் பால்நிலையைப் பிரதானப்படுத்தலாலும் தாக்கத்துக்குட்படும் அமைச்சுக்களுள் பொதுச்சேவைகள் ஆணைக்குழுக்கள் மற்றும் மத்திய ஆளணி முகவர்களும் அடங்குவர்.

பொதுச்சேவை முகாமைத்துவ முறையியலின் கட்டமைப்பும் செயற்பாடுகளும்.

அநேகமான பொதுநலவாய நாடுகளில் பொதுச்சேவை ஆணைக்குழுக்களானவை முக்கியமாக பிரித்தானிய பொதுச்சேவை ஆணைக்குழுவின் பின்னரே வடிவமைக்கப்பட்டன.

எல்லா நாடுகளிலும் அல்லாவிடினும் சில பொதுநலவாய நாடுகளில் கதந்திரத்தைப் பெறுவதற்கான மூல யாப்பிலேயே பொதுசன சேவை ஆணைக்குழுக்களுடன் தொடர்பான ஒதுக்கீடுகள் எழுதப்பட்டுள்ளன. உதாரணமாக, கிழக்கு மற்றும் தென் ஆபிரிக்க பொதுநலவாய நாடுகளில், யாப்பில் சுருக்கமாக சொல்லப்பட்ட தமது செயற்பாடுகளை பொதுச்சேவை ஆணைக்குழுக்கள் கொண்டிருக்கின்றன.

பொதுசன சேவையின் மரபு விழுமியங்களை அதாவது, நடுநிலைமை, தகுதியடிப்படையில் தெரிவு, நாணயம் மற்றும் நேர்மை என்பவற்றை ஆதரிப்பதும் பாதுகாப்பதும் பொதுச்சேவை ஆணைக்குழுவின் ஒரு முக்கியமான செயற்பாடு ஆகும். இந்த ஒவ்வொரு விழுமியங்களும் ஒரு குறிப்பிட்ட பால்நிலைப் பரிமாணத்தைக் கொண்டிருக்கின்றன.

## நடுநிலைமை:

பொதுநலவாய நாடுகள் சுதந்திரமடைந்த காலத்தில் பொதுசன சேவை ஆணைக்குழுக்களை உருவாக்கியதற்கான இலக்குகளில் ஒன்று, பொதுசன சேவையில் அரசியல் நடுநிலைமையைப் பேணுதல் ஆகும். இதன் காரணமாக பொதுசன சேவைகள் அவர்களது அந்தஸ்திலும், செயற்பாட்டிலும் அரசாங்கங்களால் செய்யப்படும் மாற்றங்களுக்கு எதிர்ப்பைக் கொண்டிருக்கலாம் (பொலிடானோ மனிங், 1996:7-9). ஆகவே பால்நிலை விழிப்புள்ள நடைமுறைகளையும் மற்றும் அணுகுமுறைகளையும் ஏற்பதை நோக்கிய அரசியல் தீர்மானம் இருப்பினும் மாற்றம் துரிதமாக வராது விடலாம்

## தகுதியடிப்படையில் தெரிவு:

பொதுசன சேவையின் அத்திவாரக் கற்களில் ஒன்றாக தகுதிக்கோட்பாடு கருதப்படுகிறது. எனினும், பால்நிலை நோக்கிலிருந்து பார்க்குமிடத்து இது சில முக்கியமான விடயங்களைக் கிளப்புகிறது. பொதுநலவாயத்தின் அநேக நாடுகளில் பல சந்ததிகளுக்கு மேலாகக் கல்வி தொழில்வாய்ப்புக்கள் பெண்களை விட மேலதிகமாக ஆண்களுக்கே கிட்டியுள்ளன. கணிசமான நாடுகளில் கல்வியிலும், தொழில் அனுபவத்திலும் ஆண்களை பெண்கள் எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கின்ற போதிலும், விண்ணப்பதாரியின் கடந்த கால பயிற்சி மற்றும் அனுபவம் அடிப்படையிலான தகுதிக் கோட்பாட்டின் குறுகிய பிரயோகமானது விகிதாசாரமற்ற எண்ணிக்கையில் வேலைகள் ஆண்களுக்கு அளிக்கப்படுவதில் முடிகிறது.

தகுதிக்கோட்பாட்டை தவறாகக் கருதாது இந்தச் சமநிலையின்மையைத் திருத்துவதற்காக இரண்டு அணுகுமுறைகளை அதாவது சாதகமான செயல் மற்றும் உறுதியான செயல் என எடுக்கலாம். சாதகமான செயல் என்பதன் அர்த்தம் குறைவாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் குழுக்களை (உதாரணமாகப் பெண்கள்) விண்ணப்பிக்க ஊக்குவிக்கவும், மற்றும் ஆட்சேர்ப்பும் தெரிவுப் படிமுறைகளும் அவர்களுக்கு வரவேற்பானதாக இருப்பதை உறுதிப்படுத்தவும் விசேட நடவடிக்கை எடுத்தல் என்பதாகும். எனினும், தெரிவு நிலையின் போது பரீட்சார்த்திகள் சமமாக நடாத்தப்படுவார்கள். எந்தக் குழுவுக்கும் முன்னுரிமை வழங்கப்பட மாட்டாது என்பதே இதன் அர்த்தமாகும். உறுதியான செயல் என்பதன் அர்த்தம், நேர்முகசபையானது, குறைவான பிரதிநிதித்துவமுள்ள குழுவைச் சேர்ந்த ஒரு பரீட்சார்த்தியை (உதாரணம்-பெண்கள்) அவனோ அவளோ பதவிக்கு பொருத்தமான தகைமையுடையவராக (சபையால் நிர்ணயிக்கப்பட்ட பிரமாணங்கள் அடிப்படையில்) இருக்கும் பட்சத்தில் அதே போன்ற தகைமைகளை நிறைவு செய்யும் இன்னுமொரு பரீட்சார்த்தியிலிருந்து முன்னுரிமைப்படுத்தல். தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி இன்னொருவரை விட குறைந்தளவே முழுத் திறமையற்றவராக இருக்கும் பட்சத்திலே மட்டுமே தகைமைக்கோட்பாடு மீறப்பட்டதாக விவாதிக்கப்படலாம். எனினும், தகைமை என்பது விண்ணப்பதாரியின் கடந்த கால அனுபவத்தில் மட்டுமன்றி குறித்த விசேட வேலைக்குரிய நிர்ணயிக்கப்பட்ட தேவைகளிலும் செயற்படுவது ஆகும்.

உத்தியோகம் வகிப்பவர் பால்நிலை விடயங்களைக் கையாள்வதில் அனுபவமுள்ளவராகவும் விழிப்புணர்வுள்ளவராகவும் இருக்க வேண்டும் என்பதை ஒரு வேலைத் தேவைக்கான நிபந்தனைகளில் உள்ளடக்குவது, பால்நிலை உணர்திறனுள்ள மற்றும் பால்நிலைத் தகவல்களை உள்ளடக்கிய தீர்மானங்களை எடுக்கக் கூடிய தீர்மானம் எடுப்பவர்களது எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு உதவும்.

### நாணயம் மற்றும் நேர்மை

பெண்கள் உரிமைகளும் மனித உரிமைகள் ஆகும் மற்றும் பெண்களுக்கான சமத்துவத்தை மறுப்பது மனித உரிமை மீறலாகும் என்ற புரிந்துணர்வின் ஊடாக பொதுசன சேவையின் இந்த மரபு விழுமியங்களை பால்நிலையைப் பிரதானப்படுத்தலில் கொண்டுவரலாம். நாணயத்துக்கும் நேர்மைக்கும் மனித உரிமைகளுக்கான மதிப்பு தேவைப்படுகிறது.

பொதுசன சேவை அமைச்சு அல்லது மத்திய ஆளணி அமைச்சு எனப் பற்பல விதமாகச் சுட்டப்படும் ஒரு அரசாங்க அமைச்சுடன் கூட்டாக இணைந்தே அநேக பொதுசன சேவை ஆணைக்குழுக்கள் வேலையாற்றும். மத்திய ஆளணி அமைச்சானது, நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதியும் அரசாங்கத்துக்கு முழுமையாகப் பொறுப்புடைமையுள்ளதுமாகும். இது பொதுசன சேவை ஆணைக்குழுவின் உசாத்துணையின் கீழ்வராத வேலை உருவாக்கம் மற்றும் வகைப்படுத்தல், அலுவலகர் அபிவிருத்தி மற்றும் பயிற்சி, அத்துடன் வேலைக்கான ஊதியமும், நிபந்தனைகளும் என்பவற்றை உள்ளடக்கக் கூடிய விடயங்களைக் கையாளும் (பொலிடானோ மற்றும் மனிங், 1996:11).

பொதுசன சேவை ஆளணி முகாமைத்துவத்தில் தொழில் அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் கொண்ட ஒரு மூன்றாவது பங்குதாரர்களுக்கு அலுவலர் நியமனங்கள், பதவி உயர்வுகள், பயிற்சிகள் மற்றும், ஒழுக்காற்றுக்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய தீர்மான அதிகாரங்கள் அதிகரித்த வகையில் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, பொதுசன சேவை ஆளணியின் முகாமைத்துவத்தில் பால்நிலையைப் பிரதானப்படுத்தல் உள்ளிடுவதற்கான மூன்று உபாயப்புள்ளிகள் உள்ளன: பொதுசன சேவை ஆணைக்குழு, மத்திய ஆளணி அலுவலகம், மற்றும் தொழில் திணைக்களம்.

அவர்களுக்கு இடையில், இந்த மூன்று பங்குதாரர்களும் ஆளணி முகாமைத்துவத்தின் பிரதான மூன்று பகுதிகளுக்கு –குறிப்பாக நியமனம், பதவி உயர்வு, வேலைக்கான வரையறைகளை நிபந்தனைகளை அமைத்தல், ஒழக்காற்று, மற்றும் அலுவலர் பயிற்சி ஆகியவற்றுக்குப் பொறுப்பாவர்.

### பொதுச் சேவை மறுசீரமைப்பு

பல பொதுநலவாய அரசாங்கங்கள் தமது பொதுச் சேவைகளில் மறுசீரமைப்புக்கான சுறுசுறுப்பான படிமுறையில் ஈடுபட்டுள்ளன. பொதுசன சேவை மறுசீரமைப்புக்கான பொதுநலவாய பூர்வாங்கமானது, ஏனைய விடயங்களுடன் தொழில் முன்னேற்றமானது உயர் ஆற்றுகையுடன் தொடர்புபட்டது என்பதை உறுதிப்படுத்த மேம்படுத்தப்பட்ட ஆற்றுகை முகாமைத்துவ முறையியல்களின் பயன்பாட்டின் ஊடாக ஒழுங்குமுறையிலிருந்து ஆற்றுகை–அடிப்படை அணுகுமுறைக்கான மாற்றத்துக்கு அழுத்தம் கொடுத்தலை உள்ளடக்குகின்றது இம் மறுசீரமைப்பின் இன்னொரு பக்கமானது, தீர்மானங்களை எடுக்கும் அதிகாரமானது பொதுச்சேவை ஆணைக்குழுவிடமிருந்து மேலும் மேலும் ஏனைய முகவர்களுக்கு அளிக்கப்படல். ஒரு நாட்டில் பொதுச்சேவை மறுசீரமைப்புப் படிமுறை எப்படி மேம்படுகிறது என்பதைப் பொறுத்து மூன்று பங்குதாரர்களும் தமது பொறுப்புக்களை வெவ்வேறு வழிகளில் பகிர்ந்து கொள்வர்.

பொதுச்சேவைகளில் பால்நிலையைப் பிரதானப்படுத்தும் செயலிலக்கானது பொதுச்சேவை ஆணைக்குழுவின் ஊடாக மட்டும் பூர்த்தியாக்கப்பட முடியாது,–

ஆளணித் தீர்மானங்கள் எடுக்கப்படும் மத்திய ஆளணி அலுவலகத்தினதும் மற்றும் ஒவ்வொரு தொழில் அமைச்சுக்களதும் ஈடுபாடு அவசியமாகும். குறிப்பாக நிதி, சட்டம் மற்றும் நீதி, அபிவிருத்தி திட்டமிடல் போன்ற மத்திய அமைச்சுக்கள் முக்கியத்துவமானவை.

அநேக பொதுநலவாய நாடுகளால் கைக்கொள்ளப்படுவது போன்ற பொதுசன சேவை முகாமைத்துவத்துக்கான ஆற்றுகை முகாமைத்துவ அணுகுமுறையானது பின்வரும் முக்கிய கூறுகளை ஆதாரமாகக் கொண்டது.

★ பொதுச்சேவையின் வேலைகளால் என்ன அடையப்பட்டது என்பது பற்றிய தக்க சமயத்திலான, துல்லியமான *தகவல்* பரவல்;

★ ஆற்றுகைக்கான தெளிவான *நியமங்களை* நிர்ணயித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடத்தைகளுக்கான எல்லைகளை நிறுவுதல்;

★ தம்மிடம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்று அலுவலகர்கள் அறிந்திருத்தல் போன்ற *பொறுப்பு* விஸ்தீரணங்களை தெளிவாக வரையறுத்தல்;

★ நல்ல வேலையை அங்கீகரித்தல், சன்மானமளித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஆற்றுகை தண்டிக்கப்படுதல் போன்ற *பொறுப்புடைமை* முறையியல்கள்.

இந்த ஒவ்வொரு நான்கு கூறுகளிலும் பால்நிலை விழிப்புணர்வை ஒன்றிணைத்தலின் ஊடாக பால்நிலையைப் பிரதானப்படுத்துவதற்கான உள்ளீட்டுப் புள்ளி ஒன்றை ஆற்றுகை முகாமைத்துவ அணுகுமுறையைக் கைக்கொள்தல் வழங்குகிறது. இதை அடைவதற்கான வழிகளை பால்நிலை முகாமைத்துவ முறையியல்(GMS) நுட்பங்கள் வழங்குகிறது.

## பால்நிலை முகாமைத்துவ முறையியல் (GMS)

## பால்நிலைப்பகுப்பாய்வு

பால்நிலைப் பகுப்பாய்வானது, பெண்களிலும், ஆண்களிலும் அபிவிருத்திக் கொள்கைகளின் மாறுபட்ட விளைவுகளைப் பகுத்தறிவதற்கான படிமுறையாகும். இது பெண்களதும் ஆண்களதும் வேறுபட்ட அந்தஸ்து, நிலைமைகள், பாத்திரங்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் பால்-தரம்பிரிக்கப்பட்ட தரவு சேகரிப்பிலும் பயன்படுத்தலிலும் ஈடுபடும். பால்நிலை சமத்துவமின்மையில் நடைமுறையிலுள்ள கொள்கைகளினதும் நிகழ்ச்சித் திட்டங்களதும் தாக்கத்தை மதிப்பீடுகள் செய்யக்கூடியதாக இந்தத் தரவுகள் கொள்கைப் படிமுறையினுள் ஊட்டப்படும். அத்துடன் பால்நிலைச் சமத்துவமற்ற அதிகார உறவுநிலைகள் எவ்வாறு பால்நிலை சமத்துவத்துக்கான இலக்கு உட்பட பல்வேறுபட்ட அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதை மதிப்பிடுவதிலும் பால்நிலைப் பகுப்பாய்வானது ஈடுபடுகிறது.

பால்நிலைப் பகுப்பாய்வு அளவு ரீதியானதும் தரரீதியானதுமாக இருக்க வேண்டும். குடித்தொகை, மனித குடியேற்ற ஒழுங்கமைப்பு, குடியிருப்போர் மற்றும் குடும்பங்கள், கல்வி, பொருளாதார செயற்பாடுகள், நிலம், கடன் போன்றவற்றை அடையும் வழிகள், சட்ட உரிமைகள், பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள், மற்றும் பெரும் பொருளாதாரம் போன்ற பகுதிகளில் பாவிக்கப்படும் பால்நிலை உணர்திறனுள்ள காட்டிகள் பயன்தகு அளவுரீதியான தரவுகளை அளிக்கும். இவை ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் ஏன் மற்றும் என்ன பால்நிலை வேறுபாடுகள் உள்ளன என்பதைத் தெளிவாக்கக் கூடிய வரலாற்று மற்றும் சமூக-கலாசாரப்பகுப்பாய்வுகளை உள்ளடக்கிய தரரீதியான தரவுகளால் பூரணமாக்கப்படும்.

## முகாமைத்துவ தகவல் முறையியல்

பால்நிலை முகாமைத்துவ முறையியலை (GMS) நிறுவுவதுடனும், செயல்படுத்துவதுடனும் தொடர்பான சகல தகவல்களதும் களஞ்சியமும் விநியோக அறையுமே முகாமைத்துவ தகவல் முறையியல் ஆகும்.

பால்நிலை முகாமைத்துவ முறையியலின்(GMS) இலக்குகள், செயற்பாடுகள் பெறுபேறுகள் பற்றியும், பால்நிலையைப பிரதானப்படுத்தலுடனும் பால்நிலை சமத்துவம், சமஉரிமையை மேம்படுத்துவதுடன் தொடர்புடைய ஏனைய தலைப்புக்களிலும் தகவல்களைச் சேகரித்தலும், தொகுத்தலும், பரப்புதலும் இதன் செயற்பாடாகும்.

முகாமைத்துவ தகவல் முறையியலானது, அரசாங்கத்தின் புள்ளிவிபரவியல் முகவர் அல்லது குடித்தொகை சபையுடன் நெருக்கமாக வேலை செய்யும். இது பால்நிலை தாக்கப்பகுப்பாய்வு, கொள்கை மதிப்பீடு மற்றும் கண்காணிப்பும் மீளாய்வும் என்பவற்றுக்கான ஆவணங்களை வழங்குவதற்காகப் பால்நிலை உணர்திறனுள்ள காட்டிகளை அடிப்படையாகக் கொண்ட பால்-தரம் பிரிக்கப்பட்ட தரவுகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதுடன் மேம்படுத்தும். அத்துடன் இது பால்நிலையைப் பிரதானப்படுத்தல் மற்றும் பால்நிலை முகாமைத்துவ முறையியல்(GMS) தொடர்பான தகவல்களைப் பரப்பவதற்காக அரசாங்க தகவல் முகவர் மற்றும் ஊடகத் தொடர்புகளுடனும் நெருக்கமாக வேலை செய்யும். மாதாந்த அல்லது காலாண்டு தகவல் தாள், அறிக்கை அல்லது செய்தி மடல் போன்றவற்றின் ஊடாக இது அடையப்படலாம். தகவல்களைச் சேகரிப்பது, ஆவணப்படுத்துவது, சேமிப்பது, மீளஎடுப்பது, மற்றும் பரப்புவது என்பவற்றுக்குப் புதுமையான முறைகள் திட்டமிடப்பட வேண்டும். தாபன நம்பிக்கை முறைமைகளிலும், நிறுவன கலாசாரத்திலும் மாற்றத்தைக் கொண்டு வருவதில் முக்கிய பங்கு வகிக்கும் இத்தகைய முயற்சிகளுக்குப் பொருத்தமான வளங்கள் கிடைக்கச் செய்ய வேண்டும் (பொதுநலவாய செயலகம், 1999a).

பொதுவாகப் பால்நிலை விவகார அமைச்சு அல்லது பெண்கள் சபை எனக் குறிப்பிடப்படும் பால்நிலை முகாமைத்துவ முறையியலின்(GMS) முதன்மை முகவர்களால் அமைக்கப்படும் முகாமைத்துவ தகவல் முறையியலுடன் நெருக்கமாக பொதுசன சேவை அமைச்சு அல்லது ஆணைக்குழுவானது வேலை செய்ய வேண்டும். பொதுசனசேவை அமைச்சானது எல்லா மட்டத்திலும் ஆட்சேர்ப்பு பற்றிய பால்-தரம்பிரிக்கப்பட்ட தகவல்களையும் ஆட்சேர்ப்பு மற்றும் ஆளணி கொள்கைகளின் பால்நிலைச் சிக்கல்களைப் பற்றிய தகவல்களையும் வழங்க வேண்டும். இதற்குப் பதிலாக மத்திய மற்றும் தொழில் அமைச்சுக்களில் பால்நிலை முகாமைத்துவ முறையியலை(GMS) நிறுவுதல், செயற்படுத்தல் பற்றிய தகவல்களை முகாமைத்துவ தகவல் முறைமையானது பொதுசன சேவை அமைச்சுக்கு வழங்க வேண்டும்.

## ஆற்றுகை மதிப்பீட்டு முறைமை

பால்நிலை சமத்துவத்தினதும் சமஉரிமையினதும் மேம்பாட்டுக்குப் பயனளிக்க கூடிய பால்நிலை விழிப்புள்ள ஒரு ஆற்றுகை மதிப்பீட்டு முறைமையானது, அதன் ஊடாக நிறுவன மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய முக்கியமான நெம்புகளில் ஒன்றாகும்.

பொதுசன சேவையிலுள்ள ஆற்றுகை மதிப்பீட்டு முறைமையானது பால்நிலை உணர்திறனுள்ளதாக இருப்பதை உறுதிசெய்வதில் மத்திய ஆளணி அலுவலகம், பொதுச்சேவைகள் ஆணைக்குழு அல்லது பொதுசன சேவை அமைச்சு ஆகியன முக்கிய பாத்திரத்தை வகிக்கலாம்.

பால்நிலை முகாமைத்துவ முறையியலின்(GMS) இலக்குகளை அடைதலில் தனிப்பட்ட மற்றும் திணைக்கள தராதரங்களிலான மாற்றங்களை அளவிடக் கூடியதாக முறைமை(கள்) இருக்க வேண்டும்.-அதாவது எந்த தனிப்பட்ட அலுவலகர்கள் பால்நிலை விழிப்புணர்வைப் பெற்றுக் கொண்டனர்(உ-ம் பயிற்சின் ஊடாக), இவ் விழிப்புணர்வைத் தமது வேலைகளில் பிரயோகிப்போர்(உ-ம் பால்நிலை இலக்குகளை அடைவதன் அல்லது தனித்துவமான பால்நிலை நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அமைப்புக்கள் ஊடாக) என்ற எல்லையிலிருந்து உள்ளடக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இந்தத் தகவலைத் தொழில் முன்னேற்றத்தை அளப்பதற்கான ஒரு வகைப்பாடாக வடிவமைக்கப்பட வேண்டும்.

ஊக்கிகள் கட்டாயமாகப் பொருளாதார ரீதியானவையாக இருக்க வேண்டும் என்பதல்ல. உதாரணமாக, முகாமைத்துவ தகவல் முறைமையின் ஊடாகப் பிரசுரிக்கப்படும் ஒரு பால்நிலை விழிப்புக்கான திறன் விருதானது நிறுவனக் கலாசாரத்தைப் பால்நிலை விழிப்புள்ள ஒன்றாவும், பால்நிலை சமஉரிமை இலக்குகளுக்கு ஆதரவானதாகவும் மாற்ற உதவக்கூடும்(பொதுநலவாய செயலகம்,1999a).

## பால்நிலைப் பயிற்சி

பால்நிலை உணர்திறனைக் கூட்டுவதற்கானதும், பால்நிலை விழிப்புணர்வின் மட்டங்களை உயர்த்தவதற்கானதுமான பால்நிலைப் பகுப்பாய்வினதும், பால்நிலைத் திட்டமிடலினதும் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்குப் பால்நிலைப் பயிற்சி அவசியமாகும். பொதுசன சேவை ஆணைக்குழுவால் அல்லது மத்திய ஆளணி அலுவலகத்தால் பொதுசன சேவையில் வேலைக்கமர்த்தப்பட்டோருக்கு வழங்கப்படும் பல்வேறு வகையான பயிற்சிகளுள் பால்நிலை விழிப்புணர்வுப் பயிற்சியானது முக்கிய தெரிவாக உள்ளடக்கப்பட வேண்டும்.

முதன்மையாக முக்கியமானது என்னவெனில், பால்நிலை முகாமைத்துவக்குழு அங்கத்தவர்களும், பால்நிலைக்குரிய பிரதான நபர்களும், பால்நிலை விடயங்களுக்கு உணர்திறனும் விழிப்பும் உடையவர்களாக இருத்தல் வேண்டும். அதனால், உயர் முன்னுரிமையாக பால்நிலையைப் பிரதானப்படுத்தலில் அவர்களது தலைமைத்துவ பாத்திரத்தை நிரப்பக்கூடிய வகையில் இந்த அலுவலகர்களுக்குப் பால்நிலை விழிப்புணர்வுப் பயிற்சி வழங்குவது கட்டாயமாகிறது.

பால்நிலைப் பயிற்சியின் தரத்தையும், வாய்ப்பையும் முன்னேற்றுவதற்கு எடுக்கக் கூடிய செயல்கள்.

- ★ சமூகத் துறைகளில் மட்டுமன்றி அரசாங்கக் கட்டமைப்புப் பூராவும் பால்நிலை விழிப்புணர்வு, பகுப்பாய்வு, திட்டமிடல் ஆகியவற்றுக்கான ஆற்றலைக் கட்டியெழுப்புதல்;
- ★ பால்நிலைப் பயிற்சியில்; பொதுவான பால்நிலை உணர்வூட்டல் பயிற்சிகளுடன், கொள்கை உருவாக்குவோரால் அடையாளம் காணப்பட்ட அறிவு இடைவெளிகளுடன் தொடர்புடைய ஆதாரபூர்வமான துறைகளுக்குத் தனித்துவமான பயிற்சிகளும் உள்ளடக்கப்பட வேண்டும்;
- ★ பால்நிலைப் பயிற்சி ஒழுங்கானதாகவும் தொடர்ந்தும் இருக்க வேண்டும்;
- ★ பால்நிலைப் பயிற்சி பால்நிலை முகாமைத்துவ முறையியலினை(GMS) மேலோட்டமாகக் கூறுவதாக, பிரதானப்படுத்தலின் இலக்கையும் அதன் கூறுகளையும் விளங்கப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.
- ★ பால்நிலையை உயர்த்துதல் என்பது ஒரு குவிக்கப்பட்ட செயற்பாடு. ஆதலால் பால்நிலைப் பயிற்சியானது அரிதான ஒன்றாகப் பார்க்கப்படாது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்ச்சித்திட்டத்தில் தொடர்ச்சியான இடைவெளிகளில் வழங்கப்பட வேண்டும் (பொதுநலவாய செயலகம்,1999a).

[illegible] (1999a).

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

* [illegible]

* [illegible]

* [illegible]

* [illegible] (GMS) [illegible]

* [illegible]

## 4. பொதுசன சேவையின் ஆளணி முகாமைத்துவத்தில் பால்நிலையைப் பிரதானப்படுத்துவதற்கான படிமுறைகள்

### பால்நிலை பகுப்பாய்வு

பொதுசன சேவையின் ஆளணி முகாமைத்துவத்தில் பால்நிலையைப் பிரதானப்படுத்துவதற்கான முதலாவது கட்டமானது, நடைமுறையிலுள்ள நிலைமையைப் பால்நிலை அடிப்படையிலான பகுப்பாய்வு செய்வதை உள்ளடக்குகிறது. தகுந்த நேரத்திலான நம்பத்தகுந்த புள்ளிவிபரங்களே ஆரோக்கியமான பால்நிலை பகுப்பாய்வுக்கு அடித்தளமாகும். தகுந்தளவு நம்பகமான நிரூபணமான புள்ளிவிபர விவரணம் இல்லையெனில் அநீதி நிலை நிறுத்தப்படலாம். உதாரணமாக, ஒரு நிறுவனத்தின் தொழிற்பாடுகளில், தீர்மானம் எடுக்கும் பதவிகளில் பெண்களின் பாத்திரமானது பொதுவாக ஆண்களை விடக் குறைவாகவே மதிக்கப்படுகிறது. துல்லியமான பால் – தரம்பிரிக்கப்பட்ட தரவுகள் இன்றி பொதுசன சேவையில் பெண்களது தனிப்பட்ட பங்களிப்பானது வெளித்தெரியாததாகவே தொடர்ந்து இருக்கும்.

தரரீதியான பால்நிலைப் பகுப்பாய்வானது, அரசியல், பொது வாழ்க்கை, தனிப்பட்ட வாழ்க்கை என எல்லா நிலைகளிலும் பெண்களதும், ஆண்களதும் வாழ்க்கை அனுபவங்களைப் பற்றியும், ஏன் மற்றும் எவ்வாறு தற்போதைய நிலைமை தோன்றியது எனவும் கேள்விகளைக் கேட்பதை உள்ளடக்கியது.

இவ்வாறான பகுப்பாய்வானது புள்ளிவிபரத் தகவல்களை உள்ளடக்கிய கணிப்புரீதியான பகுப்பாய்வைப் பூர்த்தி செய்வதாகவும் ஓரளவுக்கு அதில் தங்கியிருப்பதாகவும் அமைகிறது.

### பால்நிலை உணர்திறனுடைய காட்டிகள்

*பால்நிலை உணர்திறனுடைய காட்டி* என்பதை, பெண்களது வாழ்வு, அந்தஸ்து, நிலைமை என்பவற்றின் சில தன்மைகளை ஆண்களுடன் ஒப்பிடுவதும், அந் நிலைமை எவ்வாறு காலத்துடன் மாறுகிறது என்பதுமான புள்ளிவிபர தகவல் பகுதி என வரையறுக்கலாம். அபிவிருத்தியின் பயன்கள் சமமாகப் பகிரப்படுவதை உறுதிப்படுத்தவும், பால்நிலை சமத்துவத்துக்கான நோக்கங்கள் அடையப்படுவதை நோக்கிய முன்னேற்றத்தை அளவிடவும், இவ்வாறான காட்டிகள் அத்தியாவசியமான சாதனங்களாகும். மத்திய புள்ளிவிபர முகவர் மற்றும் குறித்த துறைசார் பகுதிகளைச் சேர்ந்த அரசாங்க புள்ளிவிபர சேகரிப்பாளர்கள் பால்நிலை – விழிப்பு அடிப்படையில் காட்டிகளை உருவாக்குவதையும் சேகரிப்பதையும் உறுதிப்படுத்துவது முக்கியமாகும்.

உதாரணமாகப் பெண்களும் ஆண்களும் பொதுசன சேவையில் எவ்வாறு ஆட்சேர்க்கப்படுகின்றனர் – எந்த மட்டத்தில், மற்றும் ஒன்றோடொன்று தொடர்பாக என்ன எண்ணிக்கையில் என்பதைத் தீர்மானித்தல் போன்ற காட்டிகள் பயன்படுத்தப்படலாம். சேர்த்தல் விகிதத்தில் முரண்பாடுகளை கணக்கிடுவதற்காக ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். மேலும் இக்காட்டிகளானவை வெவ்வேறு தரங்களில் பெண்களதும், ஆண்களதும் பதவி உயர்வு விகிதங்களையும், முரண்பாடுகளுக்கான காரணங்களையும் காட்ட வேண்டும். அத்துடன் சில தரங்களில் குறைந்தளவு திருமணமான பெண்களா உள்ளனர், அப்படியாயின் ஏன், என்பவற்றைத் தீர்மானிக்கக் கூடிய வகையில், பெண்கள் பற்றிய தரவுகளும் திருமண அந்தஸ்தின்படி தரம்பிரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். தரரீதியான ஆய்வு வீடு, அலுவலகம் மற்றும் புறக்கிருத்தியகச் செயற்பாடுகளின் அதீத வேலைப்பளுவானது, பெண்களது பதவி உயர்வு அல்லது சேர்தல் விகிதத்தை எதிர்க்கிறதா என்பதை விவரிக்க உதவுகிறது.

பெண்கள் ஓரியல்பான குழுவாக பார்க்கப்படாமல் முழுமையான தேசிய குடித்தொகையின் பல்தன்மையைப் பிரதிபலிப்பவர்களாக பார்க்கப்பட வேண்டும். ஆகவே தரவானது வயது, இனம்/ நிறம், வகுப்பு, இயலாமை ரீதியாகத் தரம் பிரிக்கப்பட்டதாக, பெண்களது வாழ்க்கையில் அவர்களது

பால்நிலை மட்டுமன்றி இவ்வாறான ஏனைய இயல்புகளும் எவ்வாறு சமமற்ற தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன என்பதை வெளிப்படுத்தும்படியாகத் தரம்பிரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

பொதுசன சேவையின் சிரேஷ்ட முகாமைத்துவம், மத்திய முகாமைத்துவம், தொழில்திறனாளர், தொழினுட்பவாளர் மற்றும் உதவி வேலையாட்கள் உட்பட ஆளணியின் எல்லா மட்டங்களிலும் பால் தரம்பிரிக்கப்பட்ட பரந்த தரவுகள் பெறப்படுவதே முதற்படியாகும். இது எங்கு, எவ்வாறு பால்நிலை சமநியாயமின்மைகள் உள்ளது என்பதை வெளிப்படுத்துவதுடன், சமநிலையின்மைகளைத் திருத்தக்கூடிய உத்திகளை அடையாளம் காண்பதில் உதவும். சிரேஷ்ட முகாமைத்துவமானது ஆண்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டதாகவும் தாழ்ந்த மட்டங்கள் பெண்களிடம் உள்ளதுமான போக்கே அநேகமாகக் காணப்படுகிறது. எனினும், இது சில நாடுகளில் மாறி வருகிறது, மற்றும் பால்நிலை சம உரிமையையும் சமத்துவத்தையும் முன்னேற்றப் பொருத்தமான உத்திகளைத் தீர்மானிக்கும் போது நாடுகளுக்குத் தனித்துவமான சூழ்நிலைகளைப் பற்றி விழிப்புடன் இருப்பதும் அவசியம்.

மேற்படி பகுப்பாய்வின் அடிப்படையில் அடுத்த அடியானது, பெண்கள் அவர்களது எண்ணிக்கையில் சமமாக பிரதிநிதித்துவப்பட்டிருப்பதையும் மற்றும் அனைவருள்ளும் பெண்களும் ஆண்களும் பால்நிலை விடயங்களில் அனுபவமுள்ளோராகவும், அத்துடன்/அல்லது பயிற்சி பெற்றோராகவும் இருப்பதை உறுதிப்படுத்துகின்ற தீர்மானத்தை எடுப்போர் பொதுசன சேவை முகாமைத்துவத்தில் யாவர் என்பதை அடையாளம் காணுதல் ஆகும். இந்த இலக்கெல்லைகளை அடைவதற்குக் குறித்த கால வரையறைகளை நிறுவ வேண்டும்.

அதனுடன் பரந்த சமூகத்தில் நீடிக்கப்பட்ட ஒரு கால அளவில் சுகாதாரம், கல்வி, வருமானம், மற்றும் அரசியல் பொருளாதாரப் பங்குபற்றல் ஆகியவற்றுக்கான அடிப்படை காட்டிகளுக்கு இணங்க பெண்களதும், ஆண்களதும் அந்தஸ்துப் பற்றிய பால்-தரம்பிரிக்கப்பட்ட மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது முக்கியமாகும். இதிலிருந்து பால்நிலை சமத்துவமின்மையின் பிரதான பகுதிகளையும், இதற்கான வரலாற்றுக் காரணங்களையும், பால்நிலை சமத்துவம் சமஉரிமையின் மேம்பாட்டுடன் தொடர்பான பலம் பலவீனம் வாய்ப்புக்கள் எதிர்ப்புக்கள் என்பவற்றையும்

அடையாளம் காண்பது இயலுமாகும். மீண்டும் தரவுகளானவை வயது, இனம்/நிறம், வகுப்பு, இயலாமை அடிப்படையில் தரம்பிரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

## கொள்கைப் பகுப்பாய்வு

நடைமுறையிலிருக்கின்ற ஆளணிக்கொள்கைகள் பால்நிலை சமத்துவத்துக்கும் சம உரிமைக்கும் தகுந்ததாக இருக்கின்றனவா என்பதைப் பால்நிலை நோக்கில் பரிசீலிக்க வேண்டும். அரசாங்கக் கொள்கைகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான பயனுள்ள அணுகுமுறை அவை பால்நிலை நடுநிலைமை, பால்நிலைத் தனித்துவம் அல்லது பால்நிலை விழிப்பு/ மீள்விநியோகம்/ தன்மை மாற்றத்துக்குட்படுபவையாக உள்ளனவா என்பதைப் பின்வருமாறு தீர்மானிப்பது ஆகும்.

★ பால்நிலை நடுநிலைமைக் கொள்கைகள் என்பவை தனித்துவமான பால்நிலைப் பரிமாணங்களைக் கொண்டிராதவை எனப் பார்க்கப்படுகின்றன. அரசாங்கக் கொள்கைகள் அவற்றின் இருப்பின் பின்னணியில் முதற்பார்வையில் பால்நிலை சம்பந்தப்படாதவையாகவே காணப்படலாம். ஆயினும், அவை ஆண்களில் காட்டும் கரிசனையைப் எப்போதாவதே பெண்களிலும் காட்டுகின்றன. பால்நிலை நடுநிலைமையானவை போல் தோற்றம் காட்டும் இக் கொள்கைகள் உண்மையில் பெரும்பாலும் பால்நிலைக்குருடாகவும் ஆண்களுக்குச் சாதகமான வகையில் சார்பாகவுமே இருக்கின்றன. ஏனென்றால், இவை கொள்கை உருவாக்கங்களில் ஈடுபடுபவர்களாகவும் அதன் தாக்கத்துக்கு உட்படுபவர்களாகவும் ஆண்களையும், ஆண்களது தேவைகளையும் ஆர்வங்களையுமே கருதுவதாலாகும்.

- ★ பால்நிலைத் தனித்துவமான கொள்கைகள் பால்நிலை வித்தியாசங்களைக் கணக்கிலெடுக்கின்றன. பெண்ணையோ அல்லது ஆணையோ தனித்துவமாக இலக்கு வைக்கின்றன. ஆனால் நடைமுறையிலுள்ள மூலவள விநியோகம் மற்றும் பொறுப்புக்களை முழுமையாகக் கைவிட்டு விடுகின்றன.

- ★ பால்நிலை விழிப்பு/மீள்விநியோகம்/தன்மைமாற்றத்துக்குட்படல் கொள்கைகள் நடைமுறையிலிருக்கின்ற மூலவள மற்றும் பொறுப்புக்களின் விநியோகத்தில் மாற்றம் செய்வதன் மூலம் பால்நிலை சமஉரிமையை மேம்படுத்தி நடைமுறையிலிருக்கும் பால்நிலை உறவுகளில் தன்மைமாற்றத்தைக் கொண்டு வர முனைகின்றன.

- ★ இந்தக் கொள்கைகள் அரசியல் ரீதியாக அதி உயர் சவால்கள் நிறைந்தவை, ஏனென்றால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் ஏலவே இருந்து வருகின்ற அதிகாரச் சமநிலையை மாற்றியமைப்பதில் ஈடுபடுதல் மட்டுமன்றி, இவை செயல் ரீதியான பால்நிலைத் தேவைகளை மட்டும் கவனத்தில் கொள்ளாது அதற்கும் அப்பால் உத்திரீதியான பால்நிலை விருப்புக்களிலும் கவனத்தைக் கொள்கின்றன. (கபீர்,1994 இலிருந்து எடுக்கப்பட்டது)

மேலதிகமாக அவற்றின் பரந்த துறைசார் கொள்கைகளுக்குத் தகுந்த வகையிலும் ஆண்களிலும் பெண்களிலும் வித்தியாசமான வழிகளில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்ற வகையில் பால்நிலைப் பகுப்பாய்வுப் படிமுறை மத்திய மற்றும் தொழில் அமைச்சுக்களால் தொடங்கப்பட அல்லது ஆதரிக்கப்பட வேண்டும்.

பால்நிலைப் பகுப்பாய்வு செய்யப்பட்டவுடன் நடைமுறையிலிருக்கும் பால்நிலை சமநிலையின்மையை எதிர்கொள்வதற்கான புதிய ஆளணிக் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டி ஏற்படும். மத்திய மற்றும் தொழில் அமைச்சுக்களின் கொள்கை உருவாக்கப் படிமுறையானது பிரத்தியேகமான துறைசார் கொள்கைத்தெரிவுகளில் பால்நிலை சம்பந்தப்பட்ட விழிப்புடன் முன்னெடுக்கப்படவேண்டும்.

## துறைசார் பகுப்பாய்வு

அரசாங்க மட்டத்தில் பால்நிலையைப் பிரதானப்படுத்தல், என்பது விமர்சனத்திற்குரிய க்வனத்துக்கெடுக்க வேண்டிய பகுதிகளை இலக்காகக் கொண்ட, பால்நிலை-சார்ந்த துறைசார் செயற்பாட்டுத் தளங்கள் அமுல்படுத்தப்படுவதை ஒன்றிணைத்தலுக்கும் மேற்பார்வை செய்தலுக்குமான

வெளிப்படையான பொறிமுறையொன்றைக் நிறுவுதலாக இருக்கும். துறைசார் திட்டங்கள் பின்பு தேசிய செயல் திட்டங்களுள் ஒன்று சேர்க்கக் கூடியதாக இருக்கும்.

ஒவ்வொரு துறைக்குமான பிரதான கொள்கைவழிகள் ∴ திசைகள், முன்னுரிமையளிக்கப்பட்ட இலக்குகள், விருத்தி செய்யப்பட்ட உத்திகள் மற்றும் செயல் திட்டங்கள் பால்நிலை சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களுள் அவசியம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இது பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும். ஏனைய சம்பந்தப்பட்ட அமைச்சுகளும் அவற்றின் கட்டமைப்புகளிலும் கொள்கைகளிலும் நிகழ்ச்சிகளிலும் பால்நிலைப் பரிமாணங்களை உள்ளடக்கிக் கொள்வதை ஊக்குவிப்பதில் பொதுசன சேவை பங்கை வகிக்க முடியும். மத்திய அமைச்சுகளான நிதி, அபிவிருத்தித் திட்டமிடுகை , நீதி என்பவற்றில் இது அமுல்ப்படுத்தப்பட வேண்டுமென்பது மிகவும் குறிப்பான முக்கியமாகும்.

## சட்டபூர்வ திட்டவரம்பு:

பொதுசன சேவையில் ஆளணி முகாமைத்துவத்தைப் பாதிக்கும் சட்டபூர்வ திட்டவரம்பானது அரசியலமைப்பு முன்னேற்பாடுகளையும் (பொதுசன சேவை ஆணைக்குழுவின் அக்கறைக்குரியவை போன்றவை) அதே போன்று பொதுசனச் சேவைச் சட்டம் அல்லது அதையொத்த சட்டபூர்வ ஆவணத்தைப் போன்ற குறிப்பான சட்டவாக்கப் பகுதிகளை உள்ளடக்கியிருக்கலாம். பெரும்பாலும் இந்தச் சட்டபூர்வதிட்டவரம்பு வழங்கும் பொதுவான பின்னணியினதும் ஒரு தொகுதி வழிகாட்டும் கொள்கைகளினதும் அடிப்படையிலேயே அந்நேரத்திலுள்ள அரசாங்கங்களால் ஆளணி முகாமைத்துவம் தொடர்பான குறிப்பான கொள்கைகள் விருத்தி செய்யப்படுகின்றன.

இந்தச் சட்டபூர்வ திட்டவரம்பு எந்தளவிற்கு பால்நிலை சமத்துவத்துக்குச் சாதகமாக இருக்கிறது அல்லது இருக்கவில்லை என்பதைத் தீர்மானிக்க இது பரீட்சிக்கப்பட வேண்டும்.

சாதாரணமாகப் பால்நிலைக்குச் சாதகமான ஒரு சட்டம் அல்லது கொள்கை பால்நிலைச் சமத்துவத்திற்கான அல்லது பாரபட்சங்களைத் தவிர்ப்பதற்கான சுட்டிப்பான குறிப்புக்களை, ஆதாரங்களைக் கொண்டிருக்கும். பால்நிலை விடயங்களுக்கு மௌனமான சட்டங்களும், கொள்கைகளும் பால்நிலை நடுநிலையுடையவையாக இருக்குமென்பதில்லை. அவை பால்நிலை சமத்துவமின்மைக்குக் காரணமானவையாகச் சேவை செய்வதாக இருக்கலாம்.

எங்கே சட்டபூர்வ திட்டவரம்பு தேவைப்படுகிறது என்று கண்டு பிடிக்கப்படுகிறதோ அங்கு அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கான எத்தனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் அல்லது நடைமுறையிலுள்ள சட்டவாக்கத்தில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.
பெரும்பாலான பொதுநலவாய நாடுகளில், பொதுசன சேவை மறுசீரமைப்பு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்படும் பொழுதுகளில் பொதுசனச் சேவைச் சட்டம் அல்லது அதையொத்த சட்டவாக்கப் பகுதிகள் , அவசியமான மறுசீரமைப்புக்களை வலுவுள்ளதாக்குவதற்காக முற்றுமுழுதாக மீள எழுதப்படுகின்றன. புதிய சட்டவாக்கத்தில் பால்நிலை விடயங்களைப் பிரதானப்படுத்த இது சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. இது நிகழ்வதை உறுதிப்படுத்த பொதுசன சேவை ஆணைக்குழுக்கள், மத்திய ஆளணி திணைக்களங்கள், பெண்கள் குழுக்கள் பரிந்துரைப்பதற்கும் ஆதரவு தேடுவதற்குமான பணியை ஆற்ற முடியும்.

சட்டபூர்வ திட்டவரம்பில் மற்றுமொரு முக்கிய பரிமாணம் சிவில் மற்றும் குற்றவியல் சட்டம் என்ற இரு அர்த்தத்திலுமான நீதி பரிபாலனமாகும்.

இந்தப் பகுதிகளில் அடங்கும் விமர்சனத்திற்குரிய பால்நிலைப் பரிமாணங்களின் விடயங்களாவன:

★ வீட்டு வன்முறை, உடல்ரீதியானதும் பாலியல் ரீதியானதுமான துஸ்பிரயோகம், பலவந்தப்படுத்தப்பட்ட விபச்சாரம் , பெண்களைக் கடத்துதல் , சிறுமிகள் மீதான பாலியல் சுரண்டல், பாலியல் தாக்குதல் உள்ளிட்ட பெண்களுக்கெதிரான வன்முறைகள்;

★ பாலியல் துன்புறுத்தல் தொடர்பான சட்டங்கள்;

★ காவல்துறையினராலும் அதிகாரத்திலுள்ளவர்களாலும் பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கையாளப்படுதல் ;

★ பெண்கள் அடையக் கூடியதான நிலம் மற்றும் வளங்கள்; மற்றும்

★ கணவன்மாருடன் ஒப்பிடுகையில் திருமணமான பெண்களின் உரிமைகள்.

பால்நிலை சமத்துவத்தைத் தகுந்ததாக்குவதற்கு தேசிய சட்டபூர்வ திட்டவரைபின் முக்கிய கூறாக CEDAW போன்ற சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளை ஏற்றுக் கொள்வதும், அவற்றை

நடைமுறைப்படுத்துவதும், அமையும்.

**பெரும்பாகப் பொருளாதாரக் கொள்கைகள்** - இவை பெரும்பாலும் பால்நிலை நடுநிலைமையானவையாகவே பார்க்கப்படுகின்றன. ஆனால் யதார்த்தத்தில் ஆண்கள் மீதும் பெண்கள் மீதும் அவற்றின் தாக்கம் சிலவேளைகளில் அடிப்படையாக வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன. பெரும்பாகப் பொருளாதாரத் திட்டமிடுதலில் ஆண்களினுடையதைப் போலவே பெண்களுடைய பங்குபற்றலையும் உறுதிப்படுத்துவதையே பால்நிலைப் பிரதானப்படுத்தல் அர்த்தப்படுத்துகின்றது. பால்நிலை சமத்துவத்துவமும் சம உரிமையும் விட்டுக்கொடுக்கப்பட்டு விடக் கூடிய இடங்களில்,-பொருளாதாரக் கட்டமைப்பு மறுசீராக்கங்களின் ஒட்டுமொத்த தாக்கங்களையும் .குறிப்பாக பொதுசன சேவையில் எண்ணிக்கை குறைப்பை முன்மொழியும் பொழுதும் மற்றும், பொதுசன செலவீனங்களை மீள்கட்டமைப்புச் செய்வதிலும் அரசாங்கம் பால்நிலை நோக்கில் நின்று பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான அனுகூலங்கள் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் வித்தியாசமான தாக்கங்களைத் தீர்மானிக்கும் வகையில் நிதிவளங்களின் பாய்ச்சலை அடையாளம் காண்பதும் கண்காணிப்பதும் பால்நிலைப் பாதீடு மற்றும் பால்நிலைக் கணக்கீட்டின் படிமுறைகளாகும். இந்த வகையான ஆரம்ப செயற்பாடுகள் அவுஸ்திரேலியா, தென்ஆபிரிக்கா மற்றும் பிற நாடுகளின் பெரும்பாகப் பொருளாதாரக் கொள்கைகளில் பால்நிலையைச் சம்பந்தப்படுத்தலில் பயனுள்ள தகவல்களை வழங்கியிருக்கிறது.

பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளில் பால்நிலை விழிப்புணர்வை உள்ளடக்குவதன் தேவையைப் பிரதிபலிப்பதாக, குறிப்பிடத்தக்களவு பொதுநலவாய நாடுகளில், தேசிய பாதீட்டு படிமுறையில் பால்நிலையை உள்ளடக்குவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

## அபிவிருத்தித் திட்டமிடல்:

பிரதான ஓட்டத்துக்குரிய அபிவிருத்திக் கோட்பாடுகள், கொள்கைகள், உத்திகள் என்பவை வறுமையை, பால்நிலைக் குருடான அல்லது பால்நிலை நடுநிலைமையான வில்லைகளுக்கு ஊடாகவே பகுப்பாய்வு செய்கின்றன. இருந்த பொழுதும் மனித இனத்தின் தராதரங்களாகவும் பிரதிநிதிகளாகவும் ஆண்களையே நினைத்துக் கொள்கின்ற காரணத்தால் மிக அதிகமான அணுகுமுறைகள் யதார்த்தத்தில் நடுநிலைமையற்றவையாகவே இருக்கின்றன. இதன் விளைவாக பால்நிலை நடுநிலைமைக் கொள்கைகளாவன, பெண்களது வாழ்ந்த அனுபவங்களையும், தேவைகளையும், விருப்புகளையும், கட்டுப்பாடுகளையும் ஆண்களது தராதரங்களுக்கு அனுசரித்துப் போவதற்கும், ஒத்துப் போவதற்கும் ஏற்ற அளவிலேயே கவனம் செலுத்துகின்றன. இது, இந்த வறுமைப் பகுப்பாய்வுப் பின்னணிக்குள், பால்நிலை நோக்குப் பரிமாணங்களின் விடுபடுகை காரணமாக வறுமை பற்றிய தவறான அறிதலுக்கே இட்டுச் செல்லும்.

செயற்திறன்மிக்க ஆண்களதும் பெண்களதும் சமநிலைப்பட்ட வகையிலான பொருளாதார ஈடுபாட்டால் மட்டுமே அபிவிருத்தி இலக்குகள் அடையப் பெறலாம் என்பதை பொதுசன சேவை திட்டவாளர் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் பெண்களே மிக அதிகளவில் வறுமையானவர்கள். எனவே திட்டங்களும் இலக்குகளும் பெண்கள் நிலைப்பட்டவையாக இருக்க வேண்டும்.

பெண்களையும் பிரதான ஓட்ட பொருளாதார அபிவிருத்திக்குள் கொண்டுவர வேண்டும். அப்பொழுது தான் பெண்களும் ஆண்களும் ஆக்கபூர்வமான வகையில் பங்காற்றக் கூடிய ஒரு நிலையில் இருப்பர்.

பொருளாதார வலுப்படுத்தலுக்கான பெண்களது உரிமையானது, வறுமை ஒழிப்புத் திட்டங்களில் வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டு முற்று முழுதான பொருளாதாரத் திட்டமிடுகைக்குள்ளும் உள்ளடக்கப்பட வேண்டும்.

## கல்வி:

கல்விச் சேவையே எதிர்கால அரசியல் தலைவர்களையும் சிவில் சேவையாளர்களையும் தயார்படுத்தும் துறையாக இருப்பதால் பால்நிலை சமத்துவத்தை கல்வித்துறையுள் முன்னெடுத்தல் பொதுசன சேவைக்கு உத்தி ரீதியான முக்கியத்துவமுடையதாகிறது. கல்வித்துறையில் பால்நிலை அணுகுமுறை மிகவும் குறிப்பாகப் பொருத்தமுடையதாகிறது ஏனெனில், பொதுநலவாயத்தில் சில பிராந்தியங்களில் இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் மாணவர்களிலும் மேலான செயற்திறனுடையவர்களாக மாணவிகள் காணப்படுகிறார்கள். அத்துடன், பொதுசன சேவையில் கீழ்மட்ட அடிநிலை உத்தியோகங்களில் ஆண்களிலும் பெண்களே அதிகம் நுழைகின்ற அதே வேளை வேறு இடங்களில் பெண்களே அதிகம் சாதகமற்ற நிலைமைகளில் இருக்கிறார்கள். பால்நிலைப் பகுப்பாய்வானது இந்த வேறுபாடுகளை வெளிக்காட்டியது.

இடைவிலகல் விகிதத்தையும் அதற்கான காரணங்களையும் தீர்மானிப்பதற்கும் இவற்றிற்கு எதிர்வினையாக பொருத்தமான கொள்கைகளை வரைவதற்குமாக ,மேல்நிலைக் கல்வி ஆட்சேர்ப்பு விகிதத்தின் பால்நிலை உணர்திறன் காட்டிகள்(பொதுசன சேவை தனது ஆட்சேர்ப்புக்கானவர்களை எடுப்பது) பகுப்பாய்வுக்கு உள்ளாக்கப்படுவது தேவையாக இருக்கிறது.

பால்ரீதியாகக் கல்வியின் வெவ்வேறு மட்டங்களில் வெவ்வேறு பாடங்களில் சித்தியடையும் விகிதங்களும், மற்றும் குறித்த ஒரேமாதிரியான பாடங்களுக்குள் பெண்களையும், ஆண்களையும் பயில வைப்பதும், சமூகமயமாக்குவதுமான பகுதிகள் குறிப்பான கவனத்திற்குரியன.

பால்நிலை சமஉரிமை இலக்குகள், முகாமைத்துவ நிலைக்கு மட்டுமே தொடர்ச்சியாக நிறுவப்படுகின்றன. அவை தொழில் முறைசார் மற்றும் தொழில்நுட்பத் துறைகளைக் கவனத்திற் கொள்வதில்லை. மிகச் சில நாடுகளிலேயே மிகவும் குறைந்தளவிலான பெண்கள் இந்தத் துறைகளில் நுழைவு நிலையில் இருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினை உருவாகுவதற்குப் பாகுபாடான சமூகமயமாக்க படிமுறை ஒரு பகுதியாகவும் , மறைந்தும் வெளிப்படையாகவும் கல்விமுறையில் காணப்படும் பாகுபாடுகள் இன்னொரு பகுதியாகவும் காரணமாகின்றன. இந்தத் துறைகளின் ஆட்சேர்ப்புப் பொறிமுறையில் கூர்ந்த கவனம் செலுத்துவது நடைபெற வேண்டும். பால்நிலைச் சமமின்மைக்கான காட்டிகளைப் பரீட்சித்துப் பார்ப்பதில் பொதுசன சேவைக்கும் கல்வித்துறைக்கும் இடையே ஒருங்கிணைப்பும் விசாலித்த பால்நிலைச் சமத்துவத்தையும் சமவுரிமையையும் முன்னெடுப்பதில் இணைந்த உத்திகள் உருவாக்கமும் தேவைப்படுகிறது.

## கொள்கை அபிவிருத்தி:

கொள்கைவிருத்திப் படிமுறை மாற்றமடைந்து வருகின்றது. பால்நிலை–விழிப்புக் கொள்கை விருத்தியின் தேவையை அரசாங்கங்கள் அங்கீகரித்திருப்பதுடன் அதனை உறுதிப்படுத்துவதற்கும் அடிகளை எடுத்து வைத்திருக்கின்றன. பங்குதாரருடன் முன் ஆலோசனை செய்யாது பால்–தரம்பிரிக்கப்படாத தரவுகள் அல்லாதவற்றை அடிப்படையாகக் கொண்டு கொள்கைகளை உருவாக்குவதும் பங்குதாரருடன் முன் ஆலோசனை செய்யாது தீர்வுகளை வழங்குவதும் பொதுசன அதிகாரிகளுக்கு இப்பொழுது கடுமையானதாகவே இருக்கும். செயல்வாதங்களினூடாகப் பெண்கள் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்டவர்களாகி விட்டார்கள். தேசிய மட்டத்தில் , பொதுசன சேவையின் அடிமட்டத்திலிருந்து உச்சிவரை வலைப்பின்னலாகி இருக்கிறார்கள். அவர்கள் கொள்கை விடயங்களில் தங்களது அதிகளவிலான ஆலோசனைகளை உரிமையுடன் கோருகிறார்கள்.

### பால்நிலை இலக்குகளை நிறுவுதல்:

2005 ஆம் ஆண்டளவில் அரசியல், பொதுசன, தனியார் அதிகார வரம்புகளுக்குள் தீர்மானங்களை எடுக்கும் விடயங்களில் 30 சதவிகிதத்துக்கும் குறையாத பெண்களின் பங்களிப்பு கொண்டு வரப்பட வேண்டும் என்பது பொதுநலவாய அரசாங்கத் தலைமைகளால் இலக்கு வைக்கப்பட்டு சம்மதிக்கப்பட்டிருந்தது. 2000ம் ஆண்டில் 50 சதவிகிதத்துக்குப் பெண்கள் முகாமைத்துவ நிலைகளிலும் தீர்மானமெடுக்கும் நிலைகளிலும் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பது பீஜிங் செயலுக்கான தளத்தின் இலக்காகும். பால்நிலைப் பிரதானப்படுத்தலுக்கு ஈடுபாட்டினைக் காட்டிய தனிப்பட்ட அரசாங்கங்கள் தமக்கான இலக்குகளைத் தேசிய நிலைமைகளுக்கும் முன்னுரிமைகளுக்கும் ஏற்ப தாமே வகுத்துக் கொண்டன. பொதுசன சேவை ஆணைக்குழுக்களும் மத்திய ஆளணி அலுவலகங்களும் தேசிய இலக்குகளை நிறுவுவதிலும் அதன் நடைமுறைப்படுத்தலை ஒன்றிணைப்பதிலும் , மேற்பார்வை செய்வதிலும் கண்காணிப்பதிலும் மிகமுக்கிய பங்கினை வகிக்க வேண்டி இருக்கின்றது.

ஆளணி முகாமைத்துவக் கொள்கைகள் இந்த இலக்குகள் எல்லைகளைப் பிரதிபலிப்பதாக இருப்பதுடன் அவற்றை உணர்ந்து கொள்வதற்கான குறிப்பான பொறிமுறைகளையும் உருவாக்க வேண்டும். இந்தப் பல்பக்கப் பரிமாணங்களும் சிக்கல் தன்மைகளும் கொண்ட இந்த விடயங்களைக் கவனத்திற் கொண்டு கையாளுவதற்கு மிகவும் பரந்த அடிப்படையிலான அணுகுமுறையொன்று தேவைப்படுகிறது. இலக்கு எல்லைகள் குறிப்பானதாகவும் சாத்தியமானதாகவும் இருக்க வேண்டும். உதாரணமாக வெறுமனே 35சதவிகிதமான அலுவலர்கள் பெண்களாக இருப்பதென்றில்லாமல், Z எனும் அமைச்சிலுள்ள X-Y தரங்களிலுள்ள 35 சதவிகிதமான சிரேஸ்ட முகாமையாளர்கள் 2000ம் ஆண்டில் பெண்களாக இருக்க வேண்டும்.

பால்நிலை சமஉரிமைக்கான இலக்கு எல்லைகளை உருவாக்குவதில் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது என்னவெனில் அது நடைமுறையிலுள்ள நிலமைகளை கவனத்திற் கொள்வதாகவும் , யதார்த்தபூர்வமாக அடையக்கூடிய இலக்காகவும் இருக்க வேண்டும்.

மிகவும் பரந்தளவிலானதும் எட்ட முடியாததுமான இலக்குகளை வைத்து அவற்றில் எதையுமே அடையாமல் விடுவதிலும், சார்பு ரீதியாக மிதமான / சாத்தியமான இலக்குகளை வைத்து கொள்வதால் அதிகளவில் முழுமை அடையப்படும்.

## ஆளணி முகாமைத்துவத்தில் பால்நிலை தொடர்பான கொள்கை விடயங்கள்

பொதுசன சேவை ஆளணி முகாமைத்துவத்தில் பால்நிலையைப் பிரதானப்படுத்துவதில், மூன்று முக்கிய பங்காளரது செயற்பாடுகளில் பல கொள்கை விடயங்கள் மோதிக் கொள்ளும்.

## தொழிலின் வேலை கொள்ளல் மற்றும் நிபந்தனைகள்

**ஊதியம் தொடர்பான பால்நிலை அடிப்படையிலான பாரபட்சத்தை நீக்குதல்** – ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கான ஊதியத்தைக் கருதின், பால்நிலை அடிப்படையிலான பாரபட்டசத்தை இல்லாமல் செய்வதற்கு, சமமான வேலைக்கு சமமான சம்பளம் என்ற கொள்கை பிரயோகத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும். தொழில் வழங்குவோர், கொள்வோர் சமதையான பெறுமதியுடைய வெவ்வேறான தொழில்களுக்கு அவற்றின் சமதையான பெறுமதி கருதி, சமதையான ஊதியத்தை வெகுமதியாக வழங்கும் அணுகுமுறையைக் கொண்டு வருவது மேலும் முன்னேற்றகரமான அடியெடுத்து வைப்பாகும். பால்நிலை ஊதிய இடைவெளிக்கான பாரிய மூல காரணமான, பால்நிலை – தனித்துவமானவை எனக் கருதப்படும் தொழில்களுக்கான ஊதிய வேறுபாடுகளை

திருத்திக் கொள்வதற்கு இது உதவியாக இருக்கும். (அதாவது ஆண்களுக்காக மட்டுமான வேலைகள் அல்லது பெண்களுக்காக மட்டும்) பாரம்பரியமாக ஆண்களுக்கென அடையாளப்படுத்தப்பட்ட தொழில்களில் பெண்களை ஈடுபடுதலை ஊக்குவிப்பதும் இதற்கு மறுதலையாக பெண்களுடன் அடையாளப்படுத்தப்பட்ட தொழில்களில் ஆண்களை ஈடுபட ஊக்குவிப்பதும் மேலும் இச்சமனிலை இன்மையைக் குறைக்க உதவும். (IDLL , 1996 : 3.3.1)

**தீர்மானமெடுக்கும் பாத்திரங்களில் போதுமானளவு பால்நிலைச் சமத்துவத்தை உறுதிப்படுத்தல்**

அரசாங்கத்தில தீர்மானமெடுக்கும் நிலைகளில் குறைந்த பட்சம் 30சதவிகிதம் பெண்கள் 2005ம் ஆண்டில் இருக்க வேண்டும் என்று பொதுநலவாயம் ஒரு இலக்கு எல்லையை உருவாக்கியது. இந்த இலக்கை ஏற்கனவே எட்டிய அரசாங்கங்களை 50 க்கு 50 ஆக உயர்த்திக் கொள்ளும்படி ஊக்கமளிக்கப்பட்டது.

இந்த இலக்கை எட்டும் வகையில் , அரசாங்கங்கள் மிகவும் செயற்திறன் மிக்க வழிமுறைகளைக் கையாண்டு சிரேஸ்ட மற்றும் தீர்மானமெடுக்கும் பதவிகளுக்கு பெண்கள் விண்ணப்பிப்பதை ஊக்குவிக்க வேண்டும். (சாதகமான யெற்பாடு) மற்றும் சாத்தியமான இடத்தில் உரிய தகுதியடைந்த பெண்களை இத்தகைய பதவிகளில் அமர்த்திக் கொள்ள வேண்டும்(உறுதியான செயற்பாடு). தொழிலின் தனித்துவம் பால்நிலை உணர்திறனுடையதாக இருக்க வேண்டுமே அன்றி, உதாரணமாக அது ஆணுக்குரியதானதாக கருதப்படக் கூடாது. (IDLL , 1996 : 3.3.4)

பல நாடுகளின் ஆட்சேர்ப்புக் கொள்கைகள் பெண்களை சில தொழில்களிலிருந்து விலத்தி வைத்திருப்பதற்கு துணைபோவதாக இருக்கின்றன. இந்த விலத்தி வைப்பு தெரிவுக் குழுவின் தெரிவான ஆண் பக்கச் சார்பு காரணமாக மேலும் பூதகரமாக்கப்படுகிறது. ஒரு ஆண் ஆதிக்கநிலை மேலோங்கிய நேர்முகத் தேர்வுக் குழு, பெண்கள் மீது அளவுக்குமதிகமான ஆழ்ந்த சோதனையையும் அழுத்தத்தையும் பிரயோகிப்பதாக இருப்பதுடன் ஆண் போட்டியாளரிலும் மேலான ஆற்றுகையையும் எதிர்பார்க்கப்படுவதாகவும் இருக்கின்றது. ஆட்களை வேலைக்கமர்த்துவதிலும் பதவி உயர்வு வழங்குவதிலும் (நேர்முக பரீட்சைச் சபைகள் உட்பட) மேற்படி விடயங்களில் தீர்மானங்களை எடுப்பவர்களில் நியாயமான அளவிற்கு பெண்களும் பால்நிலை–விழிப்புடையவர்களும் இருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பொதுசன சேவையில், பதவியுயர்வுக்கு தகைமைக் கோட்பாட்டுப் பிரயோகத்திற்கு மாற்றாக சிரேஷ்டஅனுபவம் பிரமாணமாகக் கொள்ளப்படுவது விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுகிறது. வரலாற்றுரீதியாக, பெரும்பாலான நாடுகளில் ஆண்களோடொத்தளவில் கல்வியையும், அனுபவத்தையும் பெண்கள் கொண்டிருக்கவில்லை. ஆகையால் பதவியுயர்வு சம்பந்தப்பட்டவற்றில் கால அளவும் கூடிய சிரேஷ்டஅனுபவம் பிரமாணமாகக் கொள்வது பெண்களுக்கெதிரான பாரபட்சமாகவே அமைகின்றது. நடைமுறையிலுள்ள பொதுசன சேவை மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களில்

தெரிவுக்கான தகுதியாக, சிரேஷ்டஅனுபவத்தைக் கைவிட்டுத் தகுதிக்கோட்பாட்டுக்குச் சார்பான எத்தனங்கள் காணப்படினும், பதவி உயர்வின் பல்வேறு படிநிலைகளில் தகுதிகாண் சபைகள், நேர்முகம் காணும் மற்றும் இறுதித் தேர்வுக்கு தெரிவு செய்யும் குழுக்கள் என்பன, சிரேஷ்டதரத்தைத் தகுதியாகக் கொண்டு அதிதிறமைக்குத் தடையாக, இழப்பாக்காது இருப்பதற்காகக் கவனமாக இருக்க வேண்டும்.

தொழிற்பாதைகளின் விரிவாக்கம் காரணமாக பெண்கள் ஒரு தொழிற்பாதையில் இருந்து இன்னொன்றுக்கு சிரேஷ்டநிலையில் எந்தவித இழப்புமின்றி அல்லது அபராதங்களுமின்றி மாறிக் கொள்ளலாம். இது மரபுரீதியாக ஆண்களுக்கேயான தொழிற்பரப்பிற்குள் பெண்கள் இயங்குவதற்கும் வழிப்படுத்தி விடுகிறது. இது மறுதலையாகவும் நடக்கும். (IDLL , 1996; 3.3.2)

### உத்தியோகத்தில் பாரபட்சமற்ற நிலைமைகளைத் தீர்மானித்தல்

பொதுசன சேவை உத்தியோகத்துடன் தொடர்புடைய வரையறைகளும், நிபந்தனைகளும் பெண்களுக்கெதிரான பாரபட்சமான நிபந்தனைகளை உள்ளடக்கியிருக்கலாம் அல்லது பெண்ணுக்கும் ஆணுக்குமான வாழ்க்கை முறைகள், அனுபவங்களின் சமமற்ற தன்மையை அங்கீகரிக்கத் தவறிவிடலாம். வேலைத்தளத்தில் உள்ள பெண்கள் பெரும்பாலும் இரட்டைச் சுமையைச் சுமக்கிறார்கள் என்ற யதார்த்தத்துக்கேற்ற படிகள் வழங்கப்பட வேண்டும்.

அவர்களது உத்தியோகத்துடன், வீட்டு வேலைகள், கர்ப்பந்தரித்தல், பிள்ளைப் பேறும் பிள்ளைப்பராமரிப்பும் ஆகியவற்றை உள்ளடக்கிய வீட்டுப் பொறுப்புகள், (IDLL , 1996: 2.1) மேற்படி சமமற்ற தன்மையை கவனத்திற் கொள்ளாத வரையறைகளும் நிபந்தனைகளும் பாரபட்சமானவையே. பாரபட்சம் நிகழும் மற்றொரு இடமாக ஓய்வுகாலப்படி அனுகூலங்கள் காணப்படுகின்றன. பெண்களும் ஆண்களும் சம ஒரேஅளவிலான அனுகூலங்களை ஓய்வுகாலப்படிக்கான கொள்கையில் இருந்து பெற்றுக் கொள்கிறார்களா என்ற கேள்வி அணுகப்பட வேண்டும்.

வேலை செய்யும் தாய்மார்களின் குழந்தைகளுக்கு வேலைத்தளத்திலேயே சிறுவர் பராமரிப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மத்திய ஆளணி முகவர் அவசியம் மேற்கொள்ள வேண்டும். தாய்மார்கள் தங்களது வேலைநாளை பாடசாலை மற்றும் பிள்ளைகளுக்கான ஏனைய ஏற்பாடுகளையும் கவனிக்கும் வகையில் ஒத்திசைவானதாகத் திட்டமிடும் வகையில் வேலை நேரங்கள் போதுமானளவிற்கு நெகிழ்ச்சியானதாக இருக்க வேண்டும். மேலும் தந்தையரும் இக்காரியங்களைச் செய்வதற்கேற்ற வகையில் அனுமதிக்க வேண்டும்(IDLL. 1996 :2.3).

## ஒழுங்குமுறை

### ஒழுக்காற்று செயல்முறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தல்

நடத்தை நெறிகளாவன மறைமுகமாக பாரபட்சங்களைக் கொண்டிராமலிருப்பதில் கவனம் செலுத்த வேண்டும். பாரபட்சத்துக்கு உதாரணமாக, இரட்டைத்தன்மையான நடத்தை நெறிகளை அமுல்படுத்தல், அல்லது, வழக்கமாக பெண்களைக் கொண்ட வேலைப்பகுதிகளில் நடத்தைப் பிறழுவுகளுக்கு அதீத தண்டனைகளை அமுலாக்கல் போன்றன.

### பாலியல் துஷ்பிரயோகத்தை அகற்றுதல்

அநேகம் பெண்கள் தமது வேலைத் தளங்களில் பால்நிலைசார்ந்த துன்புறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். இது பெண்களுக்கு வரவேற்பானதாக இல்லாத ஒரு வேலைச் சூழலை உருவாக்குவதில் பங்களிக்கும். பொதுசன சேவையின் நடத்தை நெறிகளாவன, பாலியல் மற்றும், பால்நிலை அடிப்படையிலான வேறு துன்புறுத்தல்களை அகற்றுவதற்கும் அதற்கான தண்டனை வழங்குவதற்குமான பிரிவுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

### பயிற்சியும் தகைமையை அதிகரித்தலும்

பொதுச்சேவைகளில் பயிற்சி என்பது இரண்டு வெவ்வேறான பால்நிலை பரிமாணங்களைக் கொண்டிருக்கிறது. முதலாவது பால்நிலைப் பகுப்பாய்வு, திட்டமிடல், கொள்கை விருத்தி மற்றும் பால்நிலை விழிப்புள்ள முகாமைத்துவமும் தீர்மானம் எடுத்தலும் என்பவற்றுக்கான தகைமையைக் கட்டியெழுப்புதல். இரண்டாவது, வேலை தொடர்பான பல்வேறுபட்ட துறைகளில் பயிற்சிகளை அடைவதுடன் சம்பந்தப்பட்டது– பெண்களுக்கும் ஆண்களுக்கும் எப்பொழுதும் பயிற்சி வாய்ப்புக்கள்

சமமாகக் கிடைப்பதில்லை. இதன் விளைவாக தொழில் தெரிவு முன்னேற்றம் என்பவற்றைப் பாதிக்கும் தடைகள் ஏற்படலாம்.

## பால்நிலை விழிப்புணர்வுப் பயிற்சிகள்

பொதுசன சேவையில் பால்நிலையைப் பிரதானப்படுத்தலில் முதலாவது முன்னுரிமையாக உயர் மட்டங்களிலுள்ள முக்கிய தீர்மானம் எடுப்போர் பால்நிலை உணர்திறனுள்ளவர்களாக இருப்பதை உறுதிப்படுத்துவது.

அவசியமாகும். ஆகவே அனைத்து மத்திய மற்றும் தொழில் அமைச்சுக்களின் நிரந்தர செயலாளர்களுக்குப் பால்நிலை விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்பட வேண்டும் (ஏற்கனவே இவ்வாறான பயிற்சி பெற்றவர்களையும், பால்நிலை விடயங்களைக் கையாள்வதில் அனுபவமும் பரிச்சயமும் உள்ளவர்களை நிச்சயமாகத் தவிர்க்கலாம்). மத்திய அமைச்சுக்களான நிதி, திட்டமிடல், ஆளணி மற்றும் நீதி அமைச்சுக்கள் பால்நிலை உணர்திறனுள்ளவையாக இருத்தல் பிரத்தியேகமாக முக்கியமானதாகும்.

பால்நிலை விழிப்புணர்வுத் திறன்கள் முகாமைத்துவப் பதவிகளிலுள்ள அனைவருக்குமான ஒரு தேவை நிபந்தனையாக இருக்க வேண்டும்.

பால்நிலைப் பயிற்சி என்பது, தமது தொழில்திறன் சார் பொறுப்புக்களில் பாவிப்பதற்கும் மற்றும் இதேபோன்ற மாற்றத்துக்கான முகவர்களாக வருவதற்கான வலுப்பெற்றோருக்கு வழங்குவதற்காகவுமான பால்நிலை தொடர்பான திறன்களும் அறிவும் செறிந்த பெண்களைக்(ஆண்களையும்) கொண்ட தனித்துவமான கூட்டம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கான வழியாகும்.

ஆகக்கூடுதலாக எத்தனை அலுவலகர்களுக்கு பால்நிலை விழிப்புணர்வின் மட்டத்தை அதிகரிக்க முடியுமோ, பிரத்தியேகமாக முக்கிய தீர்மானம் எடுக்கும் பாத்திரத்தை வகிப்போருக்கும் என்பதே இறுதியான இலக்காகும். ஆயினும், பால்நிலை விழிப்புணர்வு பயிற்சித் திட்டங்களை வகுக்கும் போதும் செயற்படுத்தும் போதும்-சிறிதே பெரிது என்ற கோட்பாடு மனதிலிருக்க வேண்டும்

பொதுசன சேவை முழுவதுமாக ஒரு இரவுக்குள் முழுமையான பால்நிலை விழிப்புணர்வையும் சமஉரிமையையும் அடைய முயல்வதற்குப் பதிலாக

நடைமுறையிலுள்ள சமூக கலாசார சூழல் பற்றிய விளக்கமும் பயிற்சியில் உள்ளிணைக்கப்பட்டதாக குறித்த, யதார்த்தமான இலக்குகளும், இலக்கெல்லைகளும் பொருத்தப்பட்டதாக அமைய வேண்டும்.

பொதுசன சேவை முழுமைக்கும் பால்நிலை விழிப்புணர்வு பரவுகையை உச்சப்படுத்த இன்னொரு முக்கிய உத்தி பயிற்றுனர்களுக்கான பயிற்சி ஆகும். சில நாடுகளில் பொதுசன சேவையின் உள்ளான பயிற்சிப்பிரிவுக்கு உயர் கல்வி நிறுவனங்களின் பால்நிலையும் அபிவிருத்திக்குமான நிலையங்களுடன் கூட்டாக இணைந்து பால்நிலை உணர்திறன் மற்றும் பால்நிலைப் பகுப்பாய்வு ஆகியவற்றில் பயிற்சித்தொடர்களை நடாத்துவது சாத்தியமாகிறது.

## பயிற்சி வாய்ப்புக்களின் போது சமஉரிமையை உறுதிப்படுத்தல்

பெண்களும், ஆண்களும் பயிற்சிகளில் சமனான வாய்ப்புக்களை பெறுகின்றனர் என்பதை,-அவரவரது துறைகளில் அவர்கள் சமமாகப் போட்டியிடக் கூடியவர்கள் என்பதை உறுதிப்படுத்தவும் வேலையிலேயே பயிற்சி உள்ளடங்கலாக, உறுதிப்படுத்தல் முக்கியமாகும். பயிற்சி என்பது, பால்நிலை சமத்துவம், சமஉரிமை நோக்கிய முன்னேற்றத்துக்கான பயனுள்ள ஒரு காட்டியாகும். ஏனெனில் இது செலவு, நேரம், பயிற்றப்பட்ட பெண்களதும் ஆண்களதும் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட

திறன்களும் அறிவினதும் மட்டம் சார்ந்து உடனடியாக பொறுப்பளிக்கக் கூடியதாக உள்ளது.

பயிற்சியானது அதனளவிலும் பால்நிலை உணர்திறனுள்ளதாக இருக்க வேண்டும். உதாரணமாக முகாமைத்துவப் பயிற்சி பெறும் பெண்கள், தலைமைத்துவம், உறுதித்தன்மை மற்றும் சமூகத்தினதும், பொதுசன சேவையினதும் ஆண்-ஆதிக்க பரப்புக்களில் வியாபித்துள்ள விழுமியங்கள் போன்ற பிரத்தியேக பகுதிகள் பற்றிய பயிற்சியால் பயன் பெறுவர். பொதுசன சேவையில் பால்நிலையைப் பிரதானப்படுத்தல் படிமுறையின் ஒரு இன்றியமையாத பகுதியாக பால்நிலை தொடர்பான வழக்கத்திலிருக்கும் விழுமியங்களையும், நடத்தைகளையும் கேள்விக்குட்படுத்துவது அமையும்.

## அரச சார்பற்ற நிறுவனங்களுடனும், கல்விச் சமூகத்துடனும் இணைப்பு ஏற்படுத்தல்:

பால்நிலையைப் பிரதானப்படுதலில் பெண்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள் பயனள்ள வளங்களாகவும் பங்காளராகவும் இருப்பர். இவ்வாறான நிறுவனங்களுடனும் கல்விச் சமூகத்துடனுமான வலையமைப்பும் துரிதமான உரையாடல்களும்,-பால்நிலை விழிப்புணர்வுப் பயிற்சிகளை வழங்குதல், பால்நிலை விழிப்புள்ள ஆளணி முகாமைத்துவத்தையும் துறைசார் கொள்கைகளையும் விருத்தி செய்தல், மற்றும் தேசிய பின்னணியில் தற்பொழுதுள்ள பெண்களதும் ஆண்களதும் தகைமைகள், திறன்கள், அறிவு ஆகியவற்றைச் சமத்துவமாகப் பயன்படுத்தல் போன்ற கேள்விகளுக்குப் பெறுமதியான உள்ளீடுகளை வழங்கும்.

## ஊக்குவிப்புக்களும் தண்டங்களும்

பொதுசன சேவை என்ற வகையில் முறைசார் அடிப்படையிலிருந்து ஆற்றுகை அடிப்படையிலான அணுகுமுறைக்கு நகரும் போது பால்நிலையைப் பிரதானப்படுத்தலைத் தூண்ட ஊக்குவிப்புக்களைப் பிரயோகிப்தற்கும் மற்றும்/அல்லது பால்நிலை பாரபட்சத்தை செயல்படுத்தும் முகாமையாளர்களுக்கு தண்டம் பிரயோகிப்தற்குமான வாய்ப்பு பெரிதாகிறது.

## நல்ல ஆற்றுகைக்கான ஊக்குவிப்பு:

பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான இலக்கெல்லை நிறுவப்பட்ட பின் அந்த இலக்கெல்லைகளை அடையும்' முகாமையாளர்களுக்கு

நிறுவப்பட்ட நம்பகத்தன்மையான ஆற்றுகை மதிப்பீட்டு முறையியல் ஒன்றின் ஊடாக வெகுமதியளிக்கப்படலாம். இவ் வெகுமதிகள் கட்டாயமாக பொருளாதார ரீதியானதாக இருக்க வேண்டுமென்பதில்லை, உண்மையில் பணத்தை விட கூடிய வினைத்திறனுடன உந்துவிப்பவையாக அங்கீகாரமும், பின்னூட்டலும் இருக்கின்றன என ஆய்வுகள் பரிந்துரைக்கின்றன(ஜோர்ம், ஸ்ரீன்ட் அன்ட் மனிங், 1996:40).

பொருளாதாரமல்லாத வெகுமதிகளாவன சான்றிதழ்களையும், திறன் விருதுகளையும் மற்றும் பதக்கங்கள் பாராட்டுசிகளையும் உள்ளடக்கலாம். இத்தைகைய விருதுகளின் நம்பகத்தன்மையைப் பேணுவதற்கு

சிறந்த ஆற்றுகைக்கான அங்கீகாரம் உயர் மட்டத்திலிருந்து வந்ததாக, அதாவது ஜனாதிபதி அல்லது பிரதமர் காரியாலயத்திலிருந்து அல்லது அந்தந்த திணைக்களங்களுக்குரிய அமைச்சர்களிடமிருந்து வந்ததாக அவை குறிப்பிடப்பட வேண்டும்(ஜோர்ம், ஸ்ரீன்ட் அன்ட் மனிங், 1996:42).

## பாரபட்சமான தொழில்பாட்டுக்கான தண்டங்கள்

பால்நிலை அடிப்படையில பாரபட்சமாக முகாமையாளர்கள் தொழிற்படின் அல்லது சமத்துவமான வேலை வாய்ப்புக் கொள்கையை அமுல்படுத்தாவிடின், பாரபட்சத்துக்கான அல்லது செயற்படுத்தாமைக்கான காரணங்களைத் தீர்மானத்தல் முதற்படியாக அமையும். முகாமையாளர் பால்நிலை விழிப்புள்ளவரா? அல்லாவிடின் பால்நிலை விழிப்புணர்வுப்பயிற்சியின் ஊடாக நிலைமையை மேம்படுத்த முடியுமா? இறுதியாக இத்தகைய பாரபட்சம் அல்லது செயற்படுத்தாமை வேறு ஒரு தண்டனையில் அதாவது மாற்றம் அல்லது இன்னொரு பதவி, தரநிலைக் குறைப்பு, ஒழுக்காற்று நடவடிக்கை போன்றவற்றில் முடியும்(ஜோர்ம், ஸ்ரீன்ட் அன்ட் மனிங், 1996:47).

## சமனான தொழில் வாய்ப்புக்கள் கொள்கை

மேற்படி விடயம் அனுகப்பட்டதா என்பதை உறுதிப்படுத்தச் சிறந்த வழி

பரந்த சமத்துவ வேலை வாய்ப்புக் கொள்கையை எடுப்பதும் அமுல்படுத்தவதுமாகும்.

## கொள்கை மதிப்பீடு

முன்மொழியப்பட்ட அல்லது இருப்பிலிருக்கின்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்பட முன் பகுப்பாய்வு செய்யப்படுவதற்கு வழங்கப்பட்ட பதமே கொள்கை மதிப்பீடு ஆகும். பால்நிலை அடிப்படையிலான கொள்கை மதிப்பீடானது பெண்களிலும் ஆண்களிலும், கொள்கைகளதும் நிகழ்ச்சித்திட்டங்களதும் வேறுபாடான தாக்கங்களை மதிப்பிடுவதை உள்ளடக்குகிறது. பால்நிலை அடிப்படையிலான கொள்கை மதிப்பீட்டுப் படிமுறையில் கேட்கப்படக்கூடிய சில கேள்விகள் பின்வருமாறு:

- ★ இக் கொள்கை பற்றி எவ்வெவ் மட்டங்களில் எத்தனை மற்றும் எந்தெந்தப் பெண்களும் ஆண்களும் கலந்தாலோசிககப்பட்டனர்?
- ★ எத்தனை மற்றும் எந்தெந்தப் பெண்களும் ஆண்களும் இதன் அமுலாக்கத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர்.
- ★ எத்தனை மற்றும் எந்தெந்தப் பெண்களும் ஆண்களும் இக்கொள்கையால் பயனடைவர், எவ்வளவுக்கு?
- ★ இக் கொள்கையானது பெண்களிலோ ஆண்களிலோ தீமையான தாக்கங்களைக் கொண்டிருக்கிறதா?
- ★ சமநிலையின்மையை மாற்றக் கூடியவாறு இக் கொள்கை எவ்வாறு திருத்தப்படலாம்?
- ★ பெண்களுக்கும் ஆண்களுக்கம் இடையே சமத்துவம் சமஉரிமை தொடர்பான சர்வதேச கடப்பாடுகளையும் அரசாங்கங்களது ஒட்டுமொத்த நோக்கங்களையும் எவ்வாறு இக் கொள்கை மேம்படுத்தும்?
- ★ கொள்கையில் பெண்களது சமனான பங்குபற்றலையும், பெண்களுக்கான சமனான வெளியீடுகளையும் தடுக்கும் தடைகள் எவை? எவ்வாறு இத் தடைகளைத் தாண்டலாம்?

## பால்நிலை செயற்பாட்டுத் திட்டம்

ஆளணி முகாமைத்துவ கொள்கைகளின் பால்நிலை அடிப்படையிலான மதிப்பீட்டின் விளைவு பொதுசன சேவைக்குள் பால்நிலையைப் பிரதானப்படுத்தலுக்கான செயல்திட்டம் ஒன்றாக அமைய வேண்டும்.

- ★ பொதுசன சேவையின் தீர்மானம் எடுக்கும் பதவிகளில் குறித்த எண்ணிக்கையில் பெண்கள்

இருப்பதற்கு நிறுவப்பட்ட இலக்கெல்லைகளை அடைவதற்கான செயற்பாடுகள்;

★ நியமனங்கள், பதவிஉயர்வுகள், வேதனம், வேலைக்கான நிபந்தனைகள், ஒழுக்காற்று நடைமுறைகள் போன்ற விடயங்களில் பால்நிலை அடிப்படையிலான பாரபட்சங்களை நீக்குவதற்கான செயற்பாடுகள்;

★ தேவைப்படின் பால்நிலை விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்குவதற்கான, விசேடமாக மத்திய அமைச்சுக்களின் திணைக்களத் தலைவர்கள், தொழில் திணைக்களத் தலைவர்கள் முகாமையாளர்கள் மற்றும் பொதுசன சேவை முழுவதுமாக தீர்மானம் எடுப்போர் ஆகியோருக்கு வழங்குவதற்கான செயற்பாடுகள்;

★ அனைத்து மத்திய மற்றும் தொழில் அமைச்சுக்களில் பால்நிலையைப் பிரதானப்படுத்தலை ஊக்குவித்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் (உதாரணமாக ஒரு பால்நிலை முகாமைத்துவ முறையியல்) மற்றும் அவ்வமைப்புக்களின் தொழிற்பாட்டை மேற்பார்வை செய்தலும் கண்காணித்தலும் ஆகியவற்றுக்கான நிறுவனக் கட்டமைப்பு ஒன்றை நிறுவுவதற்கான செயற்பாடுகள்;

★ மத்திய மற்றும் துறைசார் வேலைத்திட்டங்களையும் நிதி ஒதுக்கீடுகளையும் உருவாக்கும் போது பால்நிலை விடயங்கள் ஒன்றிணைக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தும் செயற்பாடுகள்;

★ பொதுசன சேவைக்கும் பெண்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இடையே வேலைக் கூட்டுறவை நிறுவுதல் அல்லது பலப்படுத்தலுக்கான செயற்பாடுகள்;

★ பால்நிலை விடயங்கள் பற்றிய தகவல்கள் துல்லியமான சரியான காலத்துக்குரியனவாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் முறைமைகளை நிறுவுவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கான செயற்பாடுகள்; மற்றும்

★ பால்நிலை சமத்துவத்துக்கான திட்டங்களை முழுமையாக அமுல்படுத்தப்படுவதை ஊக்குவிக்க அரச திணைக்களங்களுக்கு ஊக்கிகள் வழங்குவதற்கான மற்றும்/அல்லது அனுமதி அளிப்பதற்கான செயற்பாடுகள்.

## கண்காணிப்பும் மீளாய்வும்

திட்டம் அமுல்படுத்தப்பட்ட பின்னர், அது எவ்வளவு வெற்றியளித்துள்ளது என்பதையும், அடுத்த திட்டவட்டத்துக்கு இதனூடாக பெற்ற பாடங்களையும் நிர்ணயிப்பது முக்கியமாகும். கொள்கைகளின் பலாபலன்கள் பற்றிய கண்காணிப்பு மற்றும் மீளாய்வானது புள்ளிவிபர மற்றும் பொருளியல் பகுப்பாய்வைப் பயன்படுத்தி மீளூட்டலின் ஊடாகக் கொள்கைகளை மேலும் முன்னேற்ற வாய்ப்புக்களை வழங்கும். இந்தப் பகுப்பாய்வு பல்வேறு வடிவங்களை எடுக்கலாம்: செலவு/ஆதாயப் பகுப்பாய்வு, விளைவு மதிப்பீடு, மற்றும் கணிப்பு ரீதியான தர ரீதியான முன்னேற்ற அளவீடு.

இந்தப் பகுப்பாய்வுக்கான அடிப்படையான கருவிகள் பால்நிலைப் பகுப்பாய்வுக்கும் மற்றும் செயற்றிட்ட வட்டத்தின் மதிப்பீட்டுக் கட்டங்களில் பயன்பட்டவைக்கும் ஒப்பானவை. இவை பால்நிலை விடயங்களில் வித்தியாசங்களையும் வேற்றுமைகளையும் கணிப்பிடும் தரரீதியான ஆய்வு மற்றும் பகுப்பாய்வினால் பூரணமாக்கப்படும் பால்நிலை உணர்திறனுள்ள காட்டிகளின் பாவனையையும் உள்ளடக்கும். இவ்வாறாக ஒரு கொள்கை வட்டத்துக்குரிய கண்காணிப்பு மீளாய்வுக் கட்டம் அடுத்த வட்டத்தின் ஆரம்ப பகுப்பாய்வுக் கட்டத்துள் நேரடியாகக் கொடுப்பதாக அமையும்.

## உள்ளக மற்றும் வெளிப்புறத் தொடர்பாடல்கள்

பால்நிலையைப் பிரதானப்படுத்தும் படிமுறையை முன்னெடுப்பதில் வினைத்திறனுள்ள நம்பகத்தன்மையான தொடர்பாடல் முறைமையானது

இன்றியமையாத முக்கியத்துவமாக அமைகிறது. தொடர்பாடல் வழிகள் இரண்டு முக்கிய தொழிற்பாடுகளை ஆற்றுகின்றன.

★ முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும் மீளாய்வு செய்வதற்குமாக வழிகளை இது வழங்குகிறது. எதிர்காலத்துக்கான வினைத்திறனுள்ள கொள்கை விருப்பத் தெரிவுகளை விருத்தி செய்வதற்கு நடைமுறையிலுள்ள சந்தர்ப்பங்கள் பற்றிய துல்லியமான தரவுகள் அவசியமாகும்.

★ இவை கொள்கைத் தொடர்பாடல்களில் மாற்றங்களுக்கான வழிகளை வழங்குகின்றன உள்ளகமாக அரசாங்கத்துள்ளும் அத்துடன் வெளிப்புறமாக பரந்த பொதுசன சமூகத்திலும் முதலாவதாக வினைத்திறனுடனான கொள்கை அமுலாக்கத்துக்காகவும், இரண்டாவதாக வெளிப்படையான தன்மை, பொதுசன விழிப்புணர்வு, அங்கீகாரம் போன்ற காரணங்களுக்காகவும் இது அத்தியாவசியமாகிறது.

**குறிப்புக்கள் –**

**1. இவை போர்ட் ஒப் ஸ்பெயின், ட்ரினிடாட் அன்ட் ரோபாகோ இல்1996 இல் நடந்த பொதுநலவாய பெண்கள் விவகார அமைச்சர்கள் கூட்டத்தில் நிறுவப்பட்ட இலக்கெல்லைகள் ஆகும். இவ் இலக்கெல்லைகளுக்கான சம்மதம் 1997இல் எடின்பேர்க்கில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் வழங்கப்பட்டது.**

## உசாத்துணைகள்


CEDAW(1995). " சர்வதேச மாநாடுகளுக்கு சபையின் பங்களிப்புக்கள்." நியூயோர்க்:ஐநா,பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை நீக்குவதற்கான சபை.CEDAW/C/1995

பொதுநலவாய செயலகம்(1999a). பால்நிலை முகாமைத்துவ முறையியல் கையேட்டுத் தொடர். லண்டன்.

பொதுநலவாய செயலகம்(1999b). கல்வியில் பால்நிலையைப் பிரதானப்படுத்தல்: அரசுகளுக்கும் ஏனைய அக்கறைக்குரியோருக்குமான உசாத்துணைக் கையேடு, பால்நிலை முகாமைத்துவ முறையியல் தொடர். ஆக்கியோர்:லியோ-ரைனி, E மற்றும் அபிவிருத்தி தொழில் சட்ட கல்லூரி, கேப் டவுன் பல்கலைக்கழகம், லண்டன்.

பொதுநலவாய செயலகம்(1999c) பொதுசன சேவையில் பால்நிலையைப் பிரதானப்படுத்தல்: அரசுகளுக்கும் ஏனைய அக்கறைக்குரியோருக்குமான உசாத்துணைக் கையேடு, பால்நிலை முகாமைத்துவ முறையியல் தொடர். லண்டன்.

பொதுநலவாய செயலகம்(1997). பொதுநலவாயக் கூட்டத் தொடர், தொகுதி 2: பொதுநலவாய அரசுத் தலைவர்களது கூட்டச் செய்தி1987-1995.லண்டன்.

பொதுநலவாய செயலகம்(1995a). பால்நிலைக்கும் அபிவிருத்திக்குமான பொதுநலவாய செயற்பாட்டுக்கான திட்டம், லண்டன்.

பொதுநலவாய செயலகம்(1995b). பால்நிலை சமத்துவத்தை நோக்கி வேலை செய்தல், லண்டன்.

டோடு,R(1994).பொதுச் சேவை மறுசீரமைப்புத்திட்டம். அட்லஸ் மாநாட்டில் அளிக்கப்பட்ட கட்டுரை.

"பால்நிலை, அரசியலும் ஜனநாயகமும்".தென் ஆபிரிக்க பெண்கள் பார்வை:தொகுதி.1.இல.2.

கனேடிய அரசு!1996)பால்நிலை அடிப்படையிலான பகுப்பாய்வு-கொள்கை உருவாக்குவோருக்கான கையேடு.ஒட்டாவா:கனடா பெண்கள் அந்தஸ்து.

சிம்பாப்வே அரசு(1984). *பொதுசன சேவையில் பெண்களுக்கு சமமான வாய்ப்புக்கள்*, நிகழ்ச்சித்திட்ட செயற்பாடு, அமைச்சரவை அலுவலகம்.

சிம்பாப்வே அரசு(1995).பெண்களுக்கெதிரான சகலவிதமான பாரபட்சங்களுக்கும் எதிரான சமவாயம் பற்றிய முதலாவது அறிக்கை. ஹராரே.

IDLL(1996). "பொதுநலவாய நாடுகளுக்கான பால்நிலை சம்பந்தப்பட்ட சமமான தொழில் வாய்ப்புக்கள் கொள்கை". அபிவிருத்தி தொழில் சட்ட கல்லூரி, கேப் டவுன் பல்கலைக்கழகம், லண்டன: பொதுநலவாயச் செயலக ஆலோசனைக் கட்டுரை.

ஜோர்ம்,N; ஹன்ட,J மற்றும் மனிங்,N(1996). விளைவுகளை நோக்கி வேலை செய்தல்: பொதுசன சேவையில் தனிப்பட்ட ஆற்றுகையை முகாமைத்துவம் செய்தல். லண்டன் : பொதநலவாயச் செயலகம்.

கபீர்,N91994). "பால்நிலை விழிப்புள்ள கொள்கைத்திட்டமிடல்: ஒரு சமூகம் சார்ந்த நோக்கு",மக் டொனால்ட்;,M(ed.), அபிவிருத்தி முகவர்களில் பால்நிலைத் திட்டமிடல். ஒக்ஸ்பொர்ட்: ஒக்ஸபாம்.

காவுல;,M(1995). பிரச்சனையிலிருந்து தீர்வுக்கு: மறுசீரமைப்புக்கன பொதுநலவாய உத்திகள். லண்டன்: பொதுநலவாயச் செயலகம்.

மேட், P A மட்டாம்பானேட்ஸோ, 1(1996). பெய்ஜிங்கிற்கு அப்பால்: பெண்களது சமஉரிமையை நோக்கிய உத்திகளும் தரிசனமும். ஹராரே SADC பிரஸ் டிரஸ்ட்.

மோசர்,ஊ(1989). "மூன்றாவது உலகில் பால்நிலைத் திட்டமிடல்: உத்தி செயல் ரீதியான பால்நிலைத் தேவைகளை அடைதல், உலக அபிவிருத்தியில் தொகுதி.17.

நிக்கோல்சன், டு(1994). பால்நிலையை வியாக்கியானப்படுத்தல்.SIGNS.

பொலிடானோ, C மற்றும் மனிங்,N(1996).கோடுகளை மீள வரைதல் சேவை ஆணைக்குழுக்களும் ஆளணிமுகாமைத்துவத்தின் பிரதிநிதித்துவதும். லண்டன்: பொதுநலவாயச் செயலகம்.

ரூசோ,S et el(1989). விவசாயத்தில் பால்நிலை விடயங்கள்: USAID.

SADC செயலகம்(1997). எதிர்காலத்துள்: பால்நிலையும் SADCம். கார்பரோன், பொட்ஸ்வானா.

சென்,G மற்றும் கிரௌன்,C(1997). அபிவிருத்தி அபாயம் மற்றும் மூன்றாவது உலகப் பெண்கள் நோக்கும் மாற்றுத் தரிசனமும். மாதாந்த அறிக்கைப் பதிப்பகம்.

ஐக்கிய நாடுகள் அபிவருத்தித் திட்டம்(1990,1995,1997). மானுட அபிவிருத்தி அறிக்கை. நியூயோர்க்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்(1991). பெண்களை மையப்படுத்தல்: பெண்களுக்கான ஐக்கிய நாடுகள் நிதியம், நியூயோர்க்.

யுனிசெவ்(1994). சிம்பாப்வேயின் மறுசீராக்கலில் சமூகப் பரிமாணங்கள் பற்றிய மீள்நோக்கு 1990–94. நியூயோர்க்.

ஐக்கிய நாடுகள்(1995a).பீஜிங் பிரகடனமும் செயற்பாட்டுக்கான தளமும். நியூயோர்க்.

ஐக்கிய நாடுகள்(1995b). சமூக அபிவிருத்திக்கான உலக மன்றம்: கொப்பன்ஹேகன் பிரகடனம். நியூயோர்க்.

ஐக்கிய நாடுகள்(1994). தொண்ணூறுகளில் உலக சமூக நிலைமை.

வில்லியம்ஸ்,G மற்றும் ஹார்வே,C(1998). "பொதுநலவாயத்திலும் ஏனைய நாடுகளிலும் உயர்கல்வியில் பால்நிலை முகாமைத்துவ முறையியல்". பொதுநலவாயச் செயலக ஆலோசனைக்கட்டுரை. லண்டன்.

உலக வங்கி(1992). வறுமைக் குறைப்புக் கையேடு. உலக வங்கி, வாஷிங்டன்,DC

உலக வங்கி(1990). உலக அபிவிருத்தி அறிக்கை: வறுமைத.ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பதிப்பகம்.

## பின்னிணைப்பு - சொல் அகராதி

### பால்நிலை

பால்நிலையானது உயிரியல்ரீதியாக அல்லாது சமூகரீதியாகவும், கலாசாரரீதியாகவும் கட்டமைக்கப்பட்டுள்ள பெண்களை ஆண்களிலிருந்து வித்தியாசப்படுத்தும் குணவியல்புகள், பாத்திரங்கள், நடத்தை ஒழுங்குகள் ஆகியவற்றின் தொகுதி என வரையறுக்கப்படலாம்.

ஒரு தனிநபரின் பால் என்பது உயிரியல் ரீதியாக தீர்மானிக்கப்பட, பால்நிலை குணவியல்புகளானது சமூகத்தால் கட்டமைக்கப்படுகிறது. இது பாரம்பரிப்பு, நிபந்தனைக்குட்படுத்தல் மற்றும் சமூக-கலாசார மாதிரிகளினதும், எதிர்பார்ப்புக்களினதும் உற்பத்தியாகும். இந்தக் குணவியல்புகள் காலத்துக்கு காலமும் ஒரு கலாசாரத்திலிருந்து இன்னொன்றுக்கும் மாறுவது. இந்தப் பால்நிலைக் கருத்தியலானது பெண்களையும் ஆண்களையும் மட்டுமல்லாது, முக்கியமாக அவர்களுக்கிடையிலான அதிகார உறவுகளையும் குறிப்பிடுவது. பால்நிலை உறவுகள் உள்ளூர், தேசிய, சர்வதேச மட்டத்தில் மாறும் அரசியல், பொருளாதாரம், சமூக, மற்றும் கலாசார சூழல் பின்னணியில் அடிக்கடி மீளப் பேச்சு வார்த்தைக்குட்படுபவை.

### பால்நிலைப் பகுப்பாய்வு

பால்நிலைப் பகுப்பாய்வு ஆனது, பால்நிலை சமநிலையின்மைகளையும், சமஉரிமையின்மைகளையும் வெளி இழுக்கும் வகையிலும், பால்நிலை பாரபட்சத்துக்கான சந்தர்ப்பங்களை வெளிப்படுத்தும் வகையிலும் எந்த ஒரு தரவினதும் பால்நிலை நோக்கிலான தரரீதியான மற்றும் கணிப்பு ரீதியான பகுப்பாய்வு ஆகும். இது கொள்கைப் படிமுறையுள் ஊட்டக் கூடிய பால்-தரம்பிரிக்கப்பட்ட தரவுகளை சேகரிப்பதிலும் மற்றும் நடைமுறையிலிருக்கும் கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் பால்நிலை சமத்துவமின்மையில் கொண்டிருக்கும் விளைவை மதிப்பிடுவதிலும் ஈடுபடும். மேலும், பால்நிலை சமஉரிமையற்ற அதிகார உறவுகள் பால்நிலை சமத்துவத்துக்கான இலக்கு உட்பட, பரந்த அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் என்ன தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன என்பதை மதிப்பிடுவதிலும் ஈடுபடும்.

### பால்நிலை சமத்துவம்/சமஉரிமை

பால்நிலை சமத்துவம் இரண்டு வழிகளில் விளங்கிக் கொள்ளப்படலாம். முதலாவதாக *சம்பிரதாய சமத்துவமானது* சந்தர்ப்பங்களைப் பற்றிக் கவனியாது அனைவரையும் ஒரேவிதமாக நடாத்துவது. இது எல்லா மக்களும் சமன் அதனால் எல்லாரையும் ஒரேவிதமாக நடாத்துவதே நேர்மையானது என்ற கொள்கையை அடியாகக் கொண்டது.

மறுபக்கம், *உறுதியான சமத்துவம்* என்பது ஒரேவிதமாக நடாத்துவது என்பதை விட சமத்துவத்தை விளைவுகளில் அடைதல் என்பதில் அக்கறை காட்டுகிறது. இதுவே பால்நிலை சமஉரிமையின் சாரமாகும்(கனடாவில் பெண்களின் நிலை, 1996). ஏதாவதொரு பாலினருக்கு வெளிப்படையான பாரபட்சமின்றி இவை வழங்கப்பட்ட போதிலும் அடிக்கடி பெண்களின் பால்நிலைப் பாத்திரங்களாவன வளங்களையும் வாய்ப்புக்களையும் அடையவிடாது அவர்களைத் தடுக்கின்றன.

பாரபட்சமில்லாதவை போல தோன்றினாலும், பெண்களிலும் ஆண்களிலும் கொள்கைகளின் வேறுபாடான விளைவுகளை அங்கீகரித்து பெண்களும் ஆண்களும் வளங்களிலும் வாய்ப்புக்களிலும் சமமாகப் பயன்பெறுவதை உறுதி செய்ய அத்தியாவசியமாக என்னென்ன அடிகள் எடுத்துவைக்க வேண்டுமோ அதில் பால்நிலை சமஉரிமை ஈடுபடுகிறது.

## பால்நிலையைப் பிரதானப்படுத்தல்

பால்நிலையைப் பிரதானப்படுத்தல் என்பதன் அர்த்தம் அனைத்து அரச கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், தீர்மானங்களின் உருவாக்கத்திலும், அமுலாக்கத்திலும் பால்நிலை நோக்கு உள்ளடக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தல் என்பதாகும். மேலும் இது பால்நிலை விழிப்புணர்வை பரந்த பொதுச்சமூகத்துக்கு விரிவுபடுத்தலையும் உள்ளடக்கும்.

பால்நிலை உணர்திறனுள்ள காட்டிகள் என்பதை பெண்களது வாழ்வின் சில நிலைகள், அந்தஸ்து, நிலைமைகள் என்பவற்றை ஆணினதுடன் ஒப்பிட்டும், மற்றும் இந்த நிலைமைகள் எவ்வாறு காலத்துடன் மாறுகின்றன என்பதையும் தரும் புள்ளி விபரத்தின் ஒரு பகுதி என வரையறுக்கலாம். அபிவிருத்தியின் பயன்கள் சமமாகப் பகிரப்படுவதை உறுதிபடுத்துவதற்கும், பால்நிலை சமத்துவத்துக்கான நோக்கங்களை அடைவதை நோக்கிய முன்னேற்றத்தை அளவிடவும் இவ்வாறான காட்டிகள் அவசியம்.

விற்பனை முற்றாக
தடைசெய்யப்பட்டுள்ளது.

Shakti

Shakti Gender Equity Project
Canadian International Development Agency
Sri Lanka
2004

பிரசுரம்:
சக்தி பால்நிலை சமஉரிமைக்கான செய்திட்டம்
கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவரகம்
இலங்கை
2004